

# அன்பு வாழ்க்கை

முதலமைச்சர்

அறிஞர் அண்ணா M.A

# அன்பு வாழ்க்கை

பேரறிஞர் அண்ணா எம்.ஏ.
(தமிழக முதலமைச்சர்)

அன்பு நிலையம்
181, பிராட்வே : சென்னை - 1.

முதற் பதிப்பு 1961
இரண்டாம் பதிப்பு 1967

11566.

விலை ரூ. 1-50

அச்சிட்டோர் ;

கலையாரம் பிரிண்டர்ஸ்
சென்னை—5.

# அன்பு வாழ்க்கை

இப்போது தோழர் கிருஷ்ணன் அவர்களுக்கும் தோழியர் துளசிபாய் அம்மையாருக்கும் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. இப்படிப்பட்ட சீர்திருத்த முறையில் திருமணங்கள் நடைபெற வேண்டுமென்பதில் இப்போதெல்லாம் மக்களிடம் அதிக அக்கறை காணப்பட்டு வருகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப்பட்ட திருமணங்கள் நடைபெறுவதற்கு எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தன. இன்று அப்படிப்பட்ட எதிர்ப்புகள் இல்லை. அப்போது எதிர்ப்புகளும் ஏராளம். இப்படிப்பட்ட திருமணங்களுக்கு இப்போது எதிர்ப்புகள் குறைந்துள்ளன. அதனால் ஏராளமான சீர்திருத்த திருமணங்கள் மிகவும் தாராளமாக நடைபெறுகின்றன. என்றாலும், எதிர்ப்புகள் அடியோடு இல்லவே இல்லை என்று கூற முடியாதே!

எவ்வளவுதான் அதிகமான சீர்திருத்தத் திருமணங்கள் நடந்தபோதிலும், அவற்றைப்பற்றிய சந்தேகங்கள் மக்களுக்கு இன்னமும் அடியோடு நீங்கிவிட்டதா? நீக்கப்பட்டுவிட்டதா? இல்லையே!

சீர்திருத்தத் திருமணங்கள் அதிகம் நடைபெற வேண்டும் என்பதிலும், சீர்திருத்த முறையிலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதிலும் இன்றைக்கு பெரும்பாலான மக்கள் அக்கறை காட்டத்தான் செய்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தபோதிலும், காங்கிரஸ் கட்சியிலே உள்ள பகுத்தறிவுத் தோழரானாலும், கம்யூனிஸ்டு கட்சியிலே உள்ள சீர்திருத்த நண்பரானாலும் அல்லது வேறு எந்தக் கட்சிக்காரர் ஆனாலும் சீர்திருத்த முறையில் தான் திருமணங்கள் நடைபெற வேண்டுமென்பதில் எந்த விதமான மாறுபட்ட கருத்துக்களும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதைப்போல எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பார்ப்பனருக்கு அடுத்த ஜாதி நாங்கள் தான் என்று பெருமை பேசிடும் முதலியார் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அல்லது செட்டியார், நாயுடு, க்ஷத்திரியர் என்று கூறிக்கொள்ளும் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அந்த வகுப்பிலுள்ள பெரும்பாலான வாலிபத் தோழர்கள் அனைவரும் இப்படிப்பட்ட சீர்திருத்த திருமணங்கள் செய்து கொள்வதிலே பெரிதும் அக்கறை காட்டுகின்றனர்.

இன்று எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களானாலும் உலக நிகழ்ச்சிகளைக்கொண்டு முன்னேற விரும்புகிறார்கள். தெளிந்த அறிவு காட்டும் நல்ல போக்கின்படி நடக்கத் துணிவு கொண்டுள்ளனர். எனவேதான் நாள்தோறும் இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்று வரும் நல்ல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் எவ்வளவு சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றாலும், இன்னமும் சாதாரண மக்களிடைய

இப்படிப்பட்ட மணமுறைகளைப் பற்றிய தவறான கருத்துக்களும் பொருத்தமற்ற சந்தேகங்களும தோன்ருது அடியோடு மறைந்துவிடவில்லை. எதிர்ப்புகள் அன்றுபோல அதிக அளவில் இல்லாமலிருக்கிறதே தவிர எதிர்ப்பே இல்லையென்ற நிலை ஏற்பட்டுவிடவில்லை யென்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

இன்று சீர்திருத்தத் திருமணங்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. என்ருலும் எதிர்ப்புகள் அங்கங்கே இருக்கத்தான் செய்கின்றன. இப்போது இங்கு நடைபெருகின்ற திருமணத்திற்குக்கூட ஏதோ எதிர்ப்புகள் இருந்ததாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களைக் கண்டு சிலர் பயப்படுவதற்குக் காரணமே கிடையாது, நாங்கள் என்ன நடக்கக்கூடாதது எதையும் செய்யவில்லையே! என்றைக்கும்போல ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குந்தானே இங்கே திருமணம் நடத்தி வைககிறேம. அதிலும் ஆணின் கண்ணைக் கட்டிக்கொணடுவந்து மணப்பநதலில் நிறுத்தி விட்டு அதன் பின்னர் அதோ இருக்கும் அந்தப் பெண் தான் உனக்கு மனைவியாகப் போகிறவள் என்று கூற வில்லையே!

ஆணும் சரி, பெண்ணும் சரி, முன்னதாகவே ஒருவரைப்பற்றி மற்றவர் நன்ருக அறிநது தெரிந்து கொண்ட பின்னர்தானே திருமணம் நடைபெற வேண்டுமென்று நாங்கள் கூறுகிறேம், செய்கிறேம்,

ஒரு ஆணுக்கும், மற்ருெரு ஆணுக்கும், அல்லது ஒரு பெண்ணுக்கும் மற்ருெரு பெண்ணுக்குமா திருமணம் நடத்துகிறேம்? இல்லையே! அப்படி ஏதாவது அக்கிர

மான காரியங்கள் செய்தால், செய்ய வேண்டுமென்று பேசினால், 'ஆகா அக்கிரமக்காரர்கள், ஆகாத காரியம் புரிகிறார்கள்' என்று எங்களைக் கண்டிப்பதற்கு இடமேற்படும் ஆனால் நாங்கள் அப்படி ஏதும் செய்யவில்லையே!

நாங்கள் இங்கே திருமணம் செய்துகொள்ளும் மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் துணைவர்களாகிறோம் என்று இன்று எடுத்துக் கொள்ளும உறுதிக்குச் சாட்சிகளாகத்தான் வந்திருக்கிறோம. இங்கே கூடியுள்ள அத்தனை பேரும உற்றார் உறவினர் உட்படவும் அதற்காகத்தானே வந்துள்ளனர்.

மணம் செய்வதற்குச் சாட்சிகளாக இருக்கவும், மணமக்களை வாழ்த்தவும், புத்திமதிகளைக் கூறவுந்தான் நாம் அனைவரும் இங்கே கூடியுள்ளோம' இதைத்தான் நாம் செய்கிறோம். இதைக் கண்டு ஏன சிலர் சந்தேகப்பட வேண்டும்? எதற்காக எதிர்ப்புக் காட்ட வேணடும்?

சில பெரியவர்கள், வைதீகததில் பெரிதும் ஊறியவர்கள் வேண்டுமானால் சில காரணங்களைக் கூறுவார்கள். அதாவது இந்தத் திருமணத்திலே அவர்கள் எண்ணப்படியும் முறைப்படியும் காரியங்கள் நடைபெறவில்லை என்பது தான் அவர்களுக்கு ஏற்படும குறைகள்!

அவர்கள் எண்ணப்படி, முறைப்படி நாம் இங்கே அய்யரை அழைத்து அக்கினி வளர்க்கவில்லை. அகல் விளக்கு ஏற்றி வைக்கத் தவறிவிட்டோம் அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வழக்கத்தை விட்டுவிட்டோம். அரசாணிக்கால் நட்டு அதைச்சுற்றி வரவில்லை, மணமக்கள் அய்யர் மந்திரம் ஓதித் தாலி கட்டவில்லை.

இப்படிப்பட்ட சில வழக்கமான பல சடங்குகளைச் செய்யவில்லை. இதுதான் இன்று எதிர்ப்புக்காட்டும் சிலரது குற்றச்சாட்டுகள், சீர்திருத்தத் திருமணங்களைப் பொருத்தமட்டில், இக் குற்றச்சாட்டுகளை நாங்கள் மறுக்கவில்லை. மறுக்கவும் மாட்டோம். அவைகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம்.

நாங்கள் சீர்திருத்தம் என்று கூறுவதே, இப்படிப்பட்ட சடங்குகளை நீக்கவேண்டும், அடியோடு விட்டுவிட வேண்டும் என்பதுதானே! அப்படியிருக்க சடங்குகள் இல்லையென்று கூறுவதைக்கேட்டு அவைகளை எப்படி எங்களால் மேற்கொள்ள முடியும்?

சீர்திருத்தத் திருமணம் தேவையென்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை மறுத்தல்ல இன்று காணப்படும் எதிர்ப்புகள். எதிர்ப்புகள் எங்கு காணப்பட்டாலும் அது ஏதோ சில சடங்குகளை அழித்துவிடுகிறோம் ஒழித்து விடுகிறோம் என்பதற்காகத்தான் காணப்படுகிறது.

சங்கராச்சாரியாரிலிருந்து சாதாரண அய்யரிலிருந்து சாதாரண சாமியார்வரை படித்த பார்ப்பனர்களிலிருந்து படிக்காத பாமரர்வரை, அவர்கள் யாராக இருப்பினும் இதுவரை சீர்திருத்த முறையில்தான் திருமணங்கள் நிகழ வேண்டும் நடத்தப்படவேண்டும் என்பதற்காக சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் கூறிவரும் காரணங்களை ஒருவரும் மறுத்துப் பேசியது கிடையாதே!

அவர்கள் நாங்கள் கூறும் காரணங்களை மறுத்துப் பேசுவதில்லை. பேசவும் முடிவதில்லை. ஆனால் அர்த்தமற்ற சடங்குகளை பொருத்தமற்ற காரணங்களைக் காட்டிக் கடைபிடிக்கவில்லையென்றுதான் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

நாங்கள் மேற்கூறப்பட்ட எந்தவிதமான சடங்குகளையும் செய்வதில்லை. செய்யத்தேவை இல்லை யென்றும் கூறுகிறோம். அத்தகைய சடங்குகளைச் செய்வதற்கு எந்தவிதமான அர்த்தமுமில்லை. அதற்குக் கூறப்படும் காரணங்களும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஆகவேதான் அவைகளை நாங்கள் செய்வதில்லையென்பதுடன், செய்வதும் கூடாது எனவும் குறிப்பிடுகிறோம்.

இந்தச் சடங்குகளை நாம் ஏன் செய்யவேண்டும்? அவைகளை விட்டுவிட்டால் என்ன? என்ற கேள்விக்கு 'அவைகள் அந்தக் காலத்திலிருந்து இருந்துவரும் பழக்கங்களாயிற்றே! அவைகளை எப்படி விட்டுவிட முடியும்? என்ற முறையில்தானே பதில் கிடைக்கிறது. வேறு ஏதாவது தக்க காரணங்கள், பொருத்தமான பதில்கள், அர்த்தமுள்ள அறிவுக்குப் பொருத்தமான விளக்கங்கள் தரப்படுகின்றனவா? கிடையாதே!

ஏதோ சில காரியங்களைச் சடங்குகள் என்றும் சாஸ்திர முறைகள் என்றும் பழைய வழக்கங்கள் என்பதற்காக மட்டும், எந்தவிதமான காரணங்களுமின்றி நம்மையறியாமலேயே நாம் செய்து வருகிறோம். இவைகளைத்தான் நாம் சரியா? தேவைதானா? என்று சீர்தூக்கிப் பார்த்து முடிவு கட்டவேண்டும்!

மக்கள் தமது அன்றாட வாழ்வில் எத்தனையோ காரியங்களைச் செய்கிறார்கள். செய்கின்ற அத்தனை காரியங்களுக்குமா காரண காரியங்களையும் பொருத்தத்தையும் எண்ணிப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார்கள்! இல்லை அப்படிச் செய்வதில்லை.

எத்தனையோ காரியங்களை ஏன் செய்கிறோம்! என்ன அர்த்தம் எப்படிப் பொருத்தம் என்றெல்லாம் பார்த்துக்

கொண்டிராமலே ஏன்? ஒரு சிறிதும் எண்ணிப் பாராம லுங்கூடத் தங்களையறியாமல் பல காரியங்களை பலர் செய்து வருவதை நாம் காண்கிறோம்!

உதாரணத்திற்காக நான் சிலவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சிலருக்குத் தூக்கம் வருவதற்கு முன்னர் கொட்டாவி வரும். அப்படிக் கொட்டாவி விடும்போது விரல்களால் மூன்று சிட்டிகை போடுவதைப் பார்க்கிறோம், அப்படிப்பட்ட நண்பரைப் பார்த்து அவர் கொட்டாவி வரும்போதெல்லாம் மூன்று சிட்டிகை போடுகிறீரே அதற்கு என்ன காரணம் என்று கேளுங்கள்.

கொட்டாவி விடும் நண்பர் சிறிது கோபக்காரராக இருந்தால் முறைத்துப் பார்ப்பார். அல்லது சாந்தமான வராக இருந்தால் மெதுவாகச் சிரித்துக்கொண்டே அது ஏதோ பழக்கம். காரணம ஒன்றுமில்லை. என்று பதில் கூறுவார்.

இதைப்போலவே சூளையில் உள்ள ஒரு பெரியவர் புரசைவாக்கத்தில் நடந்த ஒரு சச்சரவில் பஞ்சாயத்து செய்யப் புறப்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம். சூளையிலுள்ள பெரியவர் புரசைவாக்கம் போவதற்காகத் தன்னுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போகிறார்.

அவர் புறப்பட்டுத் தெருவில் சிறிது தூரம் செல்லும் போது அடுத்த வீட்டின் கூறையில் இருந்த பூனை எதிர்த்த வீட்டுத் திண்ணைப் பக்கமாக ஒரு எலியைப் பிடிக்கக் குறுக்கே ஓடுகிறது. இதைக் கண்டவுடனே, பஞ்சாயத் துக்காக வேகமாக நடந்து சென்ற பெரியவர் திடுக்கிட்டுத் திரும்பி வந்து தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து விடுகிறார்.

திரும்பி வந்தவர் திண்ணையில் உட்கார்ந்தபடியே 'அடியே காமாட்சி!' என்று தமது மனைவியை அழைப்பார். இப்படி அவர் அழைத்த உடனே அந்த அம்மையார் 'சகுனம் சரியில்லை போலிருக்கிறது அதுதான் திரும்பி வந்து விட்டார்' என்று தீர்மானித்து கையில் தண்ணீருடன் திணணைப் பக்கம் வருவார். பெரியவர் அந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்த பிறகேதான் மீணடும் எழுந்து புரசைவாக்கம் போவார்.

இநதப் பெரியவர் போவதோ புரசைவாக்கம் சச்சரவைத் தீர்பபதற்காக, குறுக்கே பூனை ஓடியதோ எதிர்த்த வீட்டுப் பக்கம் ஓடிய எலியைத் துரத்திப் பிடிப்பதற்காக! குறுக்கே ஓடிய பூனையைக் கண்டு இவர் திடுக்கிடுவானேன்? திரும்பி வருவானேன்? திண்ணையில உட்கார்ந்து தண்ணீர் சாப்பிடுவதும்தான் எதற்காக?

இவர் போகின்ற காரியத்திற்கும் பூனை குறுக்கே ஓடியதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஒன்றும் இருப்பதாகத தெரியவில்லையே! என்றாலும் பூனை குறுக்கே ஓடினால் அவர் மேலே போகமாட்டார்' சகுணத் தடையாகிவிடும் என்று அஞ்சுகிறார்.

'ஏன் இப்படி?! என்று அந்தப் பெரியவரைக் கேட்டால் பொருத்தமான காரணம ஏதாவது கூறமுடிகிறதா என்றால அதுதானே இல்லை. 'ஏதோ பழக்கம்' என்று தானே அனைவரும் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பதில் கூறுகின்றனர்.

இதே போன்ற மற்றொரு உதாரணத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு வீட்டுத் திண்ணையில் இரண்டு தோழர்கள் உட்கார்ந்துகொண்டு காரசாரமாக அரசியல்

பிரச்சினைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். கையில் 'தினமணி' பத்திரிகை இருக்கிறது, அதில் உள்ள அகில உலகச் செய்திகளைப் படித்து ரசமான பேச்சு நடக்கிறது

இந்த இரண்டு தோழர்களில் ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், மற்றவர் பிரஜா சோசலிஸ்டுக் கட்சியில் பங்கு கொண்டவர். காங்கிரஸ் தோழரைப் பார்த்து, பிரஜா சோசலிஸ்ட் 'டாக்டர் லோகியாவை காங்கிரஸ் சர்க்கார் கைது செய்தது நியாயமா?' என்று கேட்பார். அதற்குக் காங்கிரஸ்காரர் உடனே உங்கள் பட்டம்தாணு பிள்ளை மட்டும் திருவாங்கூரில் குஞ்சன் நாடாரை கைது செய்தது மட்டும் என்ன நியாயம்' என திருப்பிக் கேட்பார். இதைத் தொடர்ந்து ரசமான விவாதம் தொடரும்.

இவர்கள் இப்படி விவாதம் செய்து கொண்டு இருக்கும் போது அந்த வீட்டுக் கூரையில் உள்ள பல்லி ஒன்று ஒரு பூச்சியைப் பிடிப்பதற்காக பாயும். அப்போது அது சிறிது சத்தமிடும்.

பூச்சிப் பிடிக்கப் பல்லியிடும் சத்தம் கேட்டதும், திண்ணையில் உட்கார்ந்து அருமையான அரசியல் விஷயங்களைப் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கும நண்பர்கள். தாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளையும் விட்டுவிட்டு வாயில் சப்புக்கொட்டி தரையில் மூன்று தரம் விரலால் தட்டுவார்கள்.

பூச்சி பிடிக்கும் பல்லி சத்தமிட்டால் இவர்கள் ஏன் பேச்சை நிறுத்தவேணடும் தரையை மூன்று தரம் தட்ட வேண்டும்!

அந்த நண்பர்களைக் கேட்டால் சாந்தமான நேரமாக இருந்தால் 'என்னமோ பழக்கம் சார் விடமாட்டேன் கிறது' என்று பதில் சொல்வார்! இன்னும் சிலர் நாம் இப்படிக் கேட்டால் உங்களுக்கு வேறு என்னதான் வேலை! சுயமரியாதைக் காரர்களுக்கு இப்படி எதை யாவது கிளறிக்கொண்டு கேலி செய்து கொண்ருக் கத்தான் தெரியும் என்று சலித்துக்கொள்வார்கள்.

பூச்சி பிடிக்கச் செல்லும் பல்லியின் சத்தத்தைக் கேட்டதும் தாங்கள் பேசி அலசிக்கொண்ருந்த அகில உலகப் பிரச்சினைகளையும் அலட்சியப்படுத்திவிட்டுத் தரையில் மூன்றுதரம் தட்டுவதற்குப் பொருத்தமான காரணம் எதையுமே கூறமுடியாது.

கொட்டாவி விடும்போது மூன்று தரம சிட்டிகை போடுவதும், போகும்போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுணம் சரியில்லையென்று திரும்பிவிடுவதும்' பல்லி சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும், அதற்கு பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டுவிட்ட பழக்கத்தினாலும், அறியாமையினா லுந்தான்.

இவைகளையெல்லாம காரணந் தெரியாமல், ஏன் செய்கிறோம். எதற்காகச் செய்கிறோம் என்பதைப்பற்றிய எண்ணம் ஒரு சிறிதுமின்றி, தங்களை யறியாமலே பழக் கத்தினால் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட காரண காரியமற்ற செயல்கள் பழக்கத்தின் பேராலும், வழக் கத்தின் மூலமாகவும் பல நடைபெறுவதை நாம் காண முடியும்.

இவைகளைப் போலவேதான் திருமணக் காலங் களிலேயும் சில அர்த்தமற்ற காரியங்களைச் செய்துவரு

கிருர்கள் தேவையற்ற சாமான்களைச் சேகரித்து வைத்து வீணுக்குகிருர்கள்.

இப்படிப்பட்ட சடங்குகளைத்தான் நாங்கள் சடங்குகள் கூடாது என்று கூறி, அவைகளை அடியோடு நீக்கி விட்டுப் பல ஆண்டுகளாக எத்தனையோ சீர்திருத்தத் திருமணங்களை நடத்தித்தான் வருகின்ருேம் அதனுல் என்ன கெட்டுவிட்டது? ஏதும் இல்லையே!

எனவே மக்கள் சடங்குகளைத் தள்ளிவிடுவதைக் கண்டு சந்தேகப்படுவதும், பழைய பழக்கவழக்கங்களை விட்டு விட்டோமே என்பதற்காக பதைபதைப்பதும் அர்த்த மற்றதாகும்!

திருமணத்தின்போது தாலிகட்டும் பழக்கம் மக்களிடையே இருந்துவருகிறது. தாலிக்கயிற்றில் புலியின் நகத்தைப் போலும், பல்லினைப் போலும் பொன்ஞல் சேர்த்துக் கட்டுகிருர்கள். இதற்கு என்ன அர்த்தம்?

நம்முடைய பெரியவர்களும் இதற்கு ஒருவிதமான விளக்கங் கூறுகிருர்கள். அதாவது பழங்காலத்திலே காடுகள் அதிகம் நாடுகள் குறைவு, காட்டிலே புலிகளும் அதிகம் ஆதலால் ஒரு மங்கையை மணக்க விரும்பிடும் வாலிபன், காட்டிற்குச் சென்று புலியை வேட்டையாடிக் கொன்று அதனுடைய பல்லையும், நகத்தையும் கொண்டு வந்து, தான் காதலிக்கும் பெண்ணிடம் காட்டுவானும்! இதோ பார்! நான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகம். இதுதான் அதனுடைய பல், என்று அந்த மங்கை நல்லாளிடம் தன் வீரத்தை அறிவிப்பான். இதைக்கண்ட மங்கையும் இப்படிடபட்ட வீரனைத்தான் நான் மணப்பேன், என்று கூறி அந்த வீரனையே

மணந்துகொள்வாள். தனது காதலனின் வீரத்தின் சின்னமாக அந்த புலி நகத்தையும், பல்லேயும் தன் கழுத்தில் அணிந்து கொள்வாள். இதுதான் தாலிகட்டு வதன் பொருள் என்று கூறுகின்றனர். அன்று காடுகள் அதிகம், நாடுகள் குறைவு. எனவே காட்டிலிருந்து நாட்டுக்குள் புகுந்து மனிதனை தாக்கிடும் புலியையும் எதிர்க்கும உடல் வலிமையும உள்ள உரமும் படைத்த வனைததான் பெண்கள் மணக்கவேண்டும் என்ற ஏற் பாடு-தீர்மானம் இருந்தது பொருத்தமாக இருந்திருக் கலாம்.

இதே ஏற்பாடு இன்றைக்கும இருக்கவேண்டுமா? உண்மையில் எத்தனையோ பேர் திருமணம் செய்து கொள்வதற்காக, இத்தகைய புலிவேட்டைக்குப் போய் வரத தயாராக இருப்பர், இந்த நாளில் ஒருவரும் இருக்க மாட்டார்களே!

இன்று அத்தகைய ஏற்பாடும் பழக்கமும் ஒரு சிறிதும் இல்லையென்ருலும், தாலிக் கயிற்றில் மட்டும் பொன்னுல் புலிநகமும் பல்லும் செய்து கோர்த்திட நாம தவறுவதில்லே, இது தேவைதானு?

இன்றைக்கு நாடுகள் அதிகமாகவும் காடுகள் குறைவாகவும் இருக்கின்றன. இருக்கின்ற காடுகளி லும் புலிகள் காணப்படுவது குறைவு அந்த நாட் களைபபோல இன்றும் நான் போய் காட்டில் புலி வேட்டையாடி, புலியைக் கொன்று அதன் பலலேயும், நகததையும் எடுத்துச் சென்று என காதலியிடம் என் வீரத்தைக் காட்டி அவள் கழுத்தில் இவைகளைத் தாலி யாகக் கட்டுவேன். என்று எந்த இளைஞனுவது இன் றைக்குக் கிளம்ப முடியுமா? அப்படிக் கிளம்பினுல் காடு

கள் அனைத்தும் சர்க்காரின் காட்டு ரிசர்வ் இலாகாவைச் சேர்ந்திருப்பதால் புலிவேட்டையாட விட மாட்டார்கள்!

பழைய காலத்தைப் போலவே இன்றும் புலிவேட்டையாடி காதலிக்குத் தன்னுடைய வீரத்தை வெளிப் படுத்திய பிறகே மணமுடிப்பேன் என்று எவனாவது ஒரு வாலிப வீரன், எப்படியோ ஒரு புலியைக் கண்டு பிடித்து அதனைக் கொன்று விடுகிறான் என்றே வைத்துக் கொள்ளுங்கள்.

தான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகத்தையும் பல்லையும் காதலியிடம் காட்டி, "பெண்ணே" இதோபார். நானே வேட்டையாடிய புலியின் நகம்! இது தான் அதனுடைய பல்! என் வீரத்தைக் கண்டாயா! இவைகளை என் வெற்றிச் சின்னமாக உனக்குத் தருகிறேன். இவைகளைக் கயிற்றில் கோர்த்துக் கழுத்தில் தாலியாகக் கட்டுகிறேன். என்று கூறுவதனால் எத்தனை பெண்கள் 'சரி' என்று ஏற்பர்! ஏற்கும் சூழ்நிலை இன்று இருக்கிறதா? இல்லையே!

புலியைக் கொன்றேன். இதோ அதன் பல்! அதன் அளவைப் பார்! நகத்தின் கூர்மையைக் கண்டாயா! என்று கேட்கும் காதலனின் வீரத்தையா இந்தக் காலத்துப் பெண் எண்ணிப் பெருமைப்பட முடியும்?

காதலனிடம் சிக்கிய காட்டுப் புலிக்கே இந்த கதி ஏற்பட்டு விட்டதே! இப்படிபட்டவனிடம் நாம் சிக்கி விட்டால் என்ன பாடுபட வேண்டியிருக்குமோ என்று தானே அஞ்சி நடுநடுங்குவாள்.

இந்தக் காலத்துப் பெண்கள் தங்கள் கணவன் மாரிடம் புலிவேட்டையாடும் அளவுக்கு உள்ள வீரத்தை எதிர் பார்க்கவில்லை' எந்தக் கணவனும் 'புலி' என்றவுடனே கிலி கொண்டிடும் நிலையில்தானே இருக்கிறார்கள். பெண்கள் இன்று தங்கள் கணவன்மார்களின் கட்டற்ற வீரத்தை மட்டுமே பெரிதாகக் கருதவில்லை.

அவர்கள் தங்களுக்கு வரப்போகும் கணவன் அழகாக இருக்கவேண்டும் அதோடு அன்புடையவனாக நடந்து கொள்ள வேண்டும். நல்ல குணவானாக பண்புள்ளம் படைத்தவனாக இருக்க வேண்டும். வெளியில் செல்லும்போது தங்களையும் அழைத்துச் செல்லவேண்டும். நல்ல நாகரீகமுடையவனாக விளங்க வேண்டும். குடும்பத்தில் அக்கறையுடையவனாகத் திகழ வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்

எதிர்ப்பவர்களைத் தாக்கித் தகர்த்திடும் கட்டான உடலும், உள்ள உரமும், உருட்டு விழியும் உள்ளவனாக ஊரார் கண்டு நடுங்கிடும் மனிதனாகத் தங்கள் கணவன்மார் இருக்கவேண்டும் என்பதைப் பெண்கள் விரும்பிய காலம் போய்விட்டது.

எனவே தாலி கட்டுவதிலும் நாம் செய்யும் அர்த்தமுள்ளதா? அறிவிக்குப் பொருத்தமானதுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

அய்யரை அழைத்து மந்திரம் ஓதாமல், அம்மி மிதித்து அருந்ததி காட்டுவதுபோன்ற சடங்குகளைச் செய்யாமல் நடைபெற்று வரும் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று மக்களிடையே ஒரு பயம் முன்பெல்லாம் நிலவி வந்தது. சந்தேகம் உதித்து வந்தது.

நான் கேட்கிறேன், யாருக்கு சட்டத்தின் பாதுகாப்பு தேவையென்று? நாமெல்லாம் பெரும்பாலும் ஏழைகளா தானே! நமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு நமது சொத்து பற்றிய உரிமை ஏற்பட வேண்டும் என்பதற்குத்தானே சட்டம் தேவைப்படுகிறது.

ஏராளமான பணத்தைத் தேடி வைத்துள்ள பணக் காரர்கள்தானே இதைப்பற்றி கவலைப்பட வேண்டும்!

மக்களுக்கு இனி அத்தகைய அச்சமும், ஆயாசமும், பரிதவிப்பும், பயமும் ஏற்படுவதற்குக்கூட காரணமில்லா மற் போய்விட்டது. ஏராளமான சீர்திருத்தத் திருமணங் கள் நாட்டில் நடைபெற்று வருகின்ற காரணத்தால், இப்ப டிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களும் இனி சட்டப்படி செல்லுபடியாகும் என்ற சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது.

ஆச்சாரியார் மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருந்த குட்டி கிருஷ்ண நாயர் காலத்தில் சீர்திருத்தத் திரு மணங்கள், சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றிய கேள்வி நீதிமன்றங்களில் எழுந்தது. இதன் காரணமாக அவர் ஏற்கெனவே நடந்துவிட்ட சுயமரியாதைத் திரும ணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்.

ஆனால் இன்று காமராசர் ஆட்சியில் இதனை ஏற் கனவே நடந்த திருமணங்கள் மட்டுமல்லாமல், இனி நடக் கும் சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படியாகும் என்ற முறையில் மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதன்மூலம் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டபடி செல்லாது என்று பேசி வந்த நிலைமை அடியோடு மாறிவிடு

கிறது. இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்களுக்குச் சட்டத்தின் பாதுகாப்பும் ஏற்பட்டு விட்டது.

இதுவரையில் நாம் சட்டம் ஒப்புகிறதா? இல்லையா என்பதைப்பற்றி கவலைப்படவில்லை. சமூகம் ஒப்புகிறதா? மக்கள் மனம் திருந்துகிறார்களா? என்பதை மட்டுந்தான் கவனித்துச் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வந்தோம். நாம் எதற்கும் அஞ்சாது தொடர்ந்து இத்தகைய பணியினைச் செய்து வந்ததன் பயன்தான் இப்பொழுது சட்டம் நம்மைத் தேடி வந்து நமக்குப் பாதுகாப்புத் தரும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இதே முறையில் நம் நாடு முழுவதும் பேசியும், எழுதியும் பிரசாரம் செய்து வந்த மற்றொரு காரியமும் இன்று சட்டமாகியிருக்கிறது. நாம்தான் கேட்டோம் முதன்முதலில் ஒரு ஆண் பல மனைவிகளை மணந்து கொள்வது நியாயமா? என்று.

அவனுக்கென்ன ஆண் மகன்! ஒன்றென்ன ஒன்பது மனைவிகளைக்கூடக் கட்டி ஆளலாம்! என்று பெருமை பேசி வந்த காலமும் இருக்கத்தான் இருந்தது! சமூகத்திலும் இப்படிப்பட்ட பலதார திருமணத்திற்குச் சம்மதம் அளிக்கப்பட்டிருந்தது.

ஆசைக்கு ஒரு மனைவி, சொத்துக்கு ஒரு மனைவி, சுகத்திற்கு வேறொருத்தி, போகிற இடத்தில் வேறொருத்தி, பெருமைக்கு மற்றொருத்தி என்ற முறையிலே ஒரே ஆண் பல மனைவியரை மணந்து வந்த முறையினை நாம்தான் தகாது எனக் கூறினோம், முறையல்ல என்று கண்டித்தோம்.

பல பெண்களை ஒரு ஆண் மணந்து கொள்வதினால் எவ்வளவு கேடுகள் விளைந்தன! எத்தனை பெண்கள் கணவனைக் கட்டிய பிறகு, கணவன் முகத்தைக்கூட பார்க்கமுடியாத பயங்கர நிலையில் தத்தளித்தனர்? எத்தனை குடும்பங்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது?

இந்தக் கொடுமையைக் களைய வேண்டும். ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணக்க வேண்டுமே தவிர இஷ்டம் போல் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணப்பேன் என்று நடப்பது அநாகரீகம் என்று நாம் கண்டித்தோம். அதன் பலனை இன்று காண்கிறோம்!

இன்று சட்டப்படி ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணந்துகொள்ள முடியும், ஒரு மனைவி உள்ளபோது மற்றொரு பெண்ணை மணந்துகொள்வது சட்டபடி செல்லுபடியாகாது. இதோடு இரண்டாவது மனைவியை மணந்து கொள்ளும் ஆணுக்கும் அவருக்கு பெண் தரும் பெண்வீட்டாருக்கும் சட்டப்படி பல வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

பல மனைவியரை நான் மணப்பேன். என்னைத் தடுப்பவர் யார், என்று ஆண்மகன் பேசி வந்த காலம் போய் விட்டது.

'ஆணுக்கு என்ன, எத்தனை பெண் வேண்டுமானாலும் மணக்கலாம். ஆண்டவனே பல மனைவியை மணந்துள்ளாரே' என்று பேசி வந்த வைதீகர்களின் போக்கும் இன்று சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டு விட்டது. ஏற்கனவே ஒரு மனைவியிருக்கும்போது மற்றொரு பெண்ணை மணப்பது இன்று கிரிமினல் சட்டபடி குற்றமாகும்.

இந்த நிலைமை ஏற்படக் காரணமானவர்கள் யார் நாம்தானே! கல்லடிகளையும், அதைவிட எதிர்த்தவர்களின் படுமோசமான சொல்லடிகளையும், பிறர் ஏளனத்தையும் ஏசலையும் பொருட்படுத்தாது, தாங்கி செய்துவந்த சுயமரியாதைப் பணியில் பிரச்சாரத்தின் விளைவாக மக்களிடையே ஏற்பட விழிப்புணர்ச்சிதான், சர்க்கார், இப்படிப்பட்ட சட்டமியற்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டதற்கு காரணமாகும்.

முன்பெல்லாம் தனது மனைவியைப் பிடிக்கவில்லை என்பதற்காகத் தள்ளி வைத்து விட்டுத் தன்னிஷ்டமாக வேறு மனைவியை த தேடிக்கொண்டது போலச் செய்யமுடியாது. தனது மனைவியை அர்த்தமற்ற காரணங்களுக்காக எவரும் ஒதுக்கிவிட்டு புது மனைவியைத் தேடவும் முடியாது.

இருக்கும் மனைவியைத் தள்ளிவிட்டு வேறு மனைவியை மணம் புரிந்துகொள்ள வேண்டுமானால் கணவன் முதலில் நீதிமன்றத்தில் தெரிவிக்கவேண்டும். பிறகு தன் மனைவி கருத்தரிக்கவே முடியாது என்றோ, அவள் குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கே இல்லை யென்பதையோ, தக்க டாக்டர்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டும்.

தன் மனைவிக்கு தீராத நோய் இருந்தால் நீக்கலாம், அதைக் கோர்ட்டில் டாக்டர் மூலம் உறுதிப் படுத்திக் காட்டவேண்டும். மனைவிக்குக் குட்டம் என்பதையோ கோர்ட்டாரின் அனுமதி பெற்ற பின்னர்தான் எந்த மனிதனும் இன்னும் வேறொருத்தியை மீண்டும் மணக்க முடியும்!

இதைப்போலவே இன்றைக்கு சட்டத்தின்மூலம் மணமக்களுக்கு விவாகரத்து உரிமை தரப் போகிறார்கள்.

இதற்கான சட்டம் டில்லியில் தயாராகி வருகிறது. இதற்கும் நமது பிரச்சாரம்தான் முக்கிய காரணமாகும்

மணவாழ்க்கையில் இருவரும் ஒன்றுபட்டு வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டால், அந்த நிலைமையில் அவர்கள் விவாக விடுதலை பெறும் உரிமை இருக்கவேண்டும் என்று நாம் கூறிவந்தோம்.

நாம் இப்படிக்கூறிய நேரத்தில் பலரும் ஏளனம் செய்தனர். எதிர்க்கவும் எதிர்த்தனர். ஆகாத வேலை தகாத காரியம் என்று கூடக் கூறினர். கட்டிய மனைவிக்கு விடுதலை உரிமை தருவதா என்றெல்லாம் ஆர்ப்பறித்தனர்.

இவைகள் அத்தனையும் தாங்கி, நாம் தொடர்ந்து செய்து வந்த பணி இன்று பலன்தர ஆரம்பித்து விட்டது.

எத்தனையோ குடும்பங்களில் நாம், கணவனால் கவனிக்கப்படாத மனைவியரைக் காண்கிறோம். குடிகாரக் கணவனின் அடிக்கும் உதைக்கும் தினம் தினம் ஆளாகி அவதியுறும் மனைவிமாரின் கண்ணீரைக் காண்கிறோம். கட்டிய மனைவியைக் கண்ணெடுத்தும் பாராது, விலைமாதரிடமே திரிந்துவரும் வீணர்களால் மனம் வெதும்பித் துடித்திடும் பெண்களையும் நாம் பார்க்கிறோம்.

ஆகவே தான் கணவனால் கொடுமைப்படும் மனைவியும் சரி, அல்லது மனைவியினால் தொல்லைக்கு ஆளாகும் கணவனும் சரி, தங்களுக்குள் பிடித்தமில்லாதபோது விவாகரத்து செய்து கொள்ளும் உரிமை பெற்றாக வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வந்தோம்.

விவாகரத்துரிமை இருந்தால், பொருத்தமற்ற திருமணங்கள் தவறுதலாக நடந்து விட்டாலும் பின்னா

அதனைத் திருத்திக்கொள்ள வழிவகை பிறக்க முடியும். பிடித்தமற்றவர்கள், காலமெல்லாம் கூடிவாழ்வதென்பது நடவாத காரியந்தானே. எனவே பிடித்தமற்றவர்கள் விவாகரத்து கோரி விடுதலைபெறும் உரிமையைப் பெறுவது நன்மைதானே!

விவாகரத்து உரிமை வழங்கும் சட்டம் அமுலாக்கப்பட்டு விட்டால், கண்டபடி திரியும் கணவனை மனைவி தட்டிக் கேட்டு, திருந்தாவிடினை, விவாக விடுதலை பெற்றுக்கொள்ள முடியும். குடிகாரக் கணவனின் கொடுமைக்கு நாளெல்லாம் ஆளாகி அவதியுறும் மனைவி அவனிடமிருந்து விடுதலை பெற வழி பிறக்கும்.

மனைவியைக் கவனியாது பிறபெண்கள் மீது நாட்டம் செலுத்தும் கணவனிடமிருந்து விடுதலைபெற மனைவி கோர்ட்டில் வழக்குத் தொடர முடியும். என கணவன் வீட்டுக்கு இரவில் வெகுநேரம கழித்தே வருகிறார் வந்தாலும் என்னிடம் பேசுவதில்லை. சம்பாதிக்கும் பணத்தையும் செலவுக்குக் கூட தருவதில்லை. தூக்கத்தில காந்தா, சந்தா என்றும் கனவுகண்டு வாய் பிதற்றுகிறார். இவருக்கு என் மீது பிரியமிலலை. வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே தான் இவரிடமிருந்து விவாகரத்துக் கோருகிறேன் என்று மனைவி கோர்ட்டில் கூற முடியும்.

கோர்ட்டாரும் இதைத் தீர விசாரித்து, கேள்வி கட்த மேல் கேள்விகள் போட்டு, ஒழுங்கான வாழ்க்கை நடத்த கணவன் இலாயக்குள்ளவனதானு என்பதை ஆராய்ந்து பார்த்து, அவசியமாயின் அந்த மனைவிக்கு விவாகரத்து உரிமையைத் தருவர்.

இதைப் போலவே குடும்பத்திற்கு சிறிதும் பொருத்த மற்ற மனைவியையும் ஒழுங்கீனமான பெண்ணையும் விலக்க ஆண்களும் உரிமை கோரலாம். ஒத்த கருத்தின்மை ஏற்படும் போது விலகி வாழ உரிமை பெறுவது இருவருக்கும் நல்லது தானே. இதனால் சமூகத்திற்கும் நன்மை உண்டு.

விவாகரத்து உரிமைக்கான சட்டம் வருவதைப் போலவே, நாம் நெடுநாட்களாகத் தேவையென்று பாடு பட்டு வரும் மற்றொரு பிரச்சனைக்ககாவும் சட்டமியற்றப் படுகிறது டில்லியில்.

நாம் பல ஆண்டுகளாகக் கூறிவருகிறோம். பெண்களுக்கும் ஆண்களைப் போலவே தகப்பன் சொத்துக்களில் உரிமை இருக்கவேண்டும் என்று.

நாம் இப்படிக் கூறிய போதும் பெரும்பாலோர் எதிர்த்தனர். ஏளனம் செய்து தூற்றவும் தூற்றினர். பெண்ணுக்குச் சொத்துரிமையா? பெண்ணிடம் பணம் இருந்தால் ஆணை அவள் எப்படி மதிப்பாள் என்று கூக்குரலிட்டனர் நாம் எதற்கும் அஞ்சாது இதனை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வந்தோம்.

அதன் பலன் இன்று பெண்களுக்குச் சொத்துரிமை தரும் மசோதா விரைவில் டெல்லிப் பாராளுமன்றத்தில் சட்டமாகக்கப்படுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் எந்தக் காரணங்களுக்காகப் போராடி வந்தோமோ அவைகள் எல்லாம் இன்று சட்டமாகி வருகின்றன என்பதைக் காணும் போது நாம் செய்துவரும் பணி எவ்வளவு மகத்தானது என்பது மட்டுமல்ல, நாட்

டுக்குத் தேவையான நல்லபணியைச் செய்து வந்தோம் என்பது தெரிகிறது.

இந்த நிலையைக் கண்டு நாம் பெரிதும் மகிழ்கிறோம் பெருமைப்படுகிறோம்.

இந்த முறையில்தான். நாம் சீர்திருத்தத் திருமணங்கள் செய்து வருவதிலும் வெற்றி கண்டோம்! மேலும் மகத்தான வெற்றிகளைக் காண்போம் என்பதும் உறுதி.

சீர்திருத்த முறையில் திருமணங்களை நடத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் கூறும் காரணங்களை ஒருவராலும் மறுக்க முடியவில்லை என்று குறிப்பிட்டேன் இப்படி மறுக்க முடியாமற் போனாலும் சிலர் அந்தக்கால முதல் இருந்துவரும பழக்கங்களையா தள்ளி விடுவது என்று கேட்கிறார்கள்.

அந்தக் காலம். அந்தக்காலம்! என்று பேசிவரும் தோழர்களையும், பெரியவர்களையும் நான் கேட்கிறேன் நிர்ணயமாக அந்தக்காலம், எந்தக்காலம் என்பதை! சென்னையில் ஒரு பகுதிக்கு 'சூளை' என்று பெயரிடப் படுகிறது இங்கிருந்து இதுவரை சூளை என்பதற்குக் குறிப்பிட்ட நிர்ணயம் இருக்கிறது. புரைசைவாக்கம் என்பது அங்கேயிருந்து அதுவரையுள்ள பகுதிகள் என்பதற்கு அத்தாட்சியான வரம்பு கூறப்படுகிறது! ஒரு ரூபாய் என்றால் 16 அணா என்று ஒரு திட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வீசை என்பது 40 பலம் கொண்டது என்று ஒரு நிர்ணயம் உண்டு. ஒரு கஜம் என்றால் இத்தனை அடி அல்லது இத்தனை முழம் என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

இதைப் போலவே அந்தக் காலம், அந்தக் காலம் என்று பேசிவரும் பெரியவர்கள் 'அந்தக்காலம்' எதிலிருந்து எதுவரை அந்தக்காலம்? அவர்கள் எடுத்துக் காட்டிக் கூறும் காலம்? என்பதற்கு ஒரு நிர்ணயம் கூறட்டுமே! கூற முடியுமா அவர்களால்?

என்னுடைய மகன் இன்று பத்தாவது வகுப்பில் படிக்கிறான். அவன் படிப்பில் ஏதாவது தவறுகள் செய்யும்போது நான் கூறுகிறேன் 'இதெல்லாம் என்ன படிப்படா? இதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! அந்தக் காலத்தில் நான் படித்தபோது—?' என்று பேசுகிறேன்.

நான் குறிப்பிடும் 'அந்தக் காலத்தை'யா இந்த வைதீகப் பெரியவர்கள் அந்தக்காலம் என்று பேசுகிறார்கள்?

நான் சிறுவனாக இருந்தபோது நான் என்னுடைய மகனைப் பார்த்து கேட்டதைப் போலவே என்னுடைய தகப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். நீ படிப்பது என்னடா படிப்பு. அந்தக் காலத்தில் நாங்கள் படித்த படிப்பு என்ன அருமையானது தெரியுமா? என்று இதைப்போலவே எனது தகப்பனாரைப் பார்த்து அவருடைய தகப்பனார், அதாவது எனது பாட்டனார் இதே முறையில்தான் கேட்டார். நீங்கள் படிப்பதற்கு இப்படி அழுகிறீர்களே! அந்தக் காலத்தில் நாங்கள் எல்லாம் மணலைக் கொட்டி அதில் ஹரிநமோத்து சிந்தம் என்று கைவிரலால் எழுதி முடிவதற்குள், கைவிரலிலுள்ள இரத்தம் எல்லாம் சுண்டியே விடும் என்று.

இவர்களில் யார் குறிப்பிடும் அந்தக் காலத்தை வைதிகர்கள் அந்தக் காலம் என்று கூறுகிறார்கள் நான் குறிப்பிடுகிற அந்தக் காலத்தையா? எனது அல்லது எனது பாட்டனார் சொன்னாரே அந்தக் காலமா? அதைவிட அவரது தகப்பனார் கூறினாரே அந்தக் காலமா? எந்தக் காலத்தை இவர்கள் அந்தக் காலம் என்று கூறுகிறார்கள்? அந்தக் காலம் எது என்பதற்கு ஒரு நிர்ணயம் ஏற்படுத்திவிட்டுப் பிறகு கூறட்டும் அந்தக்கால பழக்கங்கள் என்று. அதற்குப் பிறகு நல்லதா கெட்டதா என்பதைப் பற்றி பேசுவோம். அந்தக்காலம் எந்தக்காலம் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிவிடாமல் வெறும் அடிமூச்சுக் குரலால் அந்தக்காலம் அழிவதா? அந்தக்கால ஏற்பாடுகள் தொலைவதா? என்று உரத்துப் பேசுவதால் என்ன பயன்?

இன்று வெள்ளைக்காரன் கூடத்தான் பேசுகிறான். 'நாங்கள் அந்தக் காலத்தில் இந்தியாவை ஆண்டபோது என்ன செய்தோம் தெரியுமா? என்று. இதைப்போலவே முஸ்லீம்களுந்தான் சொல்கிறார்கள் 'அந்தக் காலத்தில் டெல்லியில் ஔரங்கசீப் ஆண்டபோது முஸ்லீம்களுக்கு இருந்த செல்வாக்கே செல்வாக்கு' என்று முஸ்லீம்கள் பேசுகிறார்கள். அந்தக் காலத்தில் ஆண்ட விக்கிரமாதித்ய ராஜாவின் காலமே காலம்' என்று இந்துக்களும் பெருமையோடு பேசுகின்றனர். பௌத்தர்கள் அந்தக்காலத்தில் ஆண்ட அசோகனை நினைக்கிறார்கள். இப்படிப் பலரும் அந்தக் காலத்தைப்பற்றி பலவிதமாகப் பேசுகிறார்களே! பெருமைப்படுகிறார்களே! இதில் எதை அந்தக்காலம் என்று திட்டவட்டமாக ஏற்பது? பின்பற்றுவது.

அந்தக்காலம் எது என்பதற்கு யாராலும் திட்டமான முடிவு கூறமுடியாது. நிர்ணயத்தையும் காட்டமுடியாது.

அந்தக்காலம் என்பது முடிவற்றது, அளவிட்டுக் கூற முடியாதது, அளக்க அளக்க நீண்டுகொண்டே போகிற கஜகோல் அது!

ஆகவே அந்தக்காலம் என்று பேசுவதும் அந்தக்கால ஏற்பாடுகள் என்று கூறுவதும், பழக்கங்கள் என்று சுட்டிக் காட்டுவதும் நிச்சயமற்றவைகளாகும். பொருத்தமான தாகவும் இல்லாதவைகளாகும்.

வைதீக நண்பர்களையே கேட்கிறேன். அவர்கள் புராணப்படி பார்த்தாலும் அந்தக்காலம் என்பதைக் கூற முடியுமா? ஹரிச்சந்திரன் ஆண்ட காலமா? இராமன் ஆண்டான் என்று கூறப்படும் காலமா? அவருக்கு முன்னர் அறுபதினாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்ததாகப் பேசப்படும் தசரதன் காலமா? அதற்கு முன்னால் இருந்த தாகக் கூறப்படும் இட்சுவாகு பரம்பரையின் காலமா? அது எந்தக்காலம்? கூறுங்கள்?

உலகம் தோன்றியது எனக் கூறப்படும் காலமா? அல்லது உலகம் தோன்றாத அநாதிகாலமா? மகாவிஷ்ணு ஆலிலைமீது திருப்பாற் கடலில் பள்ளிக்கொண்டிருந்தார் என்று கூறும் புராண காலமா? அப்படிப் பள்ளி கொண் டிருந்த மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து முளைத்த தாமரைமீது பிர்மா வீற்றிருந்த காலமா? பிர்மாவின் நாவில் இருந்து சரஸ்வதி வேதங்களை ஓதிய காலமா? எது அந்தக்காலம்? புராணங்களின்படி பார்த்தாலும் அந்தக் காலம் இதுதான் என்றோ, அதுதான் என்பதாகவோ உறுதியாகக் கூறமுடியுமா? முடியாதே! முடியவில்லையே!

எந்தக் காலத்தையாவது குறிப்பிட்டு அதுதான் அந்தக்காலம் என்று, நாங்கள் கூறும் காலம் என்று

சொல்லிவிடட்டும், அந்தக் காலத்தில் உள்ள பழக்க வழக்கங்களை மட்டுந்தான் பின்பற்ற வேண்டும், என்று வது நிர்ணயம் செய்யட்டும்.

அப்படி ஏதாவது ஒரு காலத்தை 'அந்தக்காலம்' என்று தீர்மானித்து விட்டாலும், அதன்படி நடக்க, வாழ யாராலும் முடியாதே!

அந்தக்காலம் போலவே இந்தக்காலத்திலும் நடக்கத்தான் வேண்டுமென்றால், காஞ்சிபுரத்திலுள்ள நான் இந்தத் திருமணத்திற்கு வரவேண்டுமானால், நான்கு நாள் முன்னதாகவல்லவா புறபட்டு இருக்கவேண்டும். கட்டுச்சோறு கட்டிக்கொண்டு கட்டை வண்டியில் பிரயாணம் செய்யவேண்டும். அல்லது கால்நடையாக காடு மேடு சுற்றித்தானே வந்தாகவேண்டும். ஆனால் இன்று அப்படி நடக்க முடியுமா? அல்லது நடப்பதுதான் நல்லதா?

இராமன் காலந்தான் அந்தக்காலம என்று முடிவு கட்டினால் அந்த நாளைப் போலவே இந்த நாளிலும் வாழ முடியுமா? வாழத்தான் வேண்டுமென்றாலும் முடியுமா? இராமர் காலத்தை நல்லகாலம் என்று போற்றிப் புகழ் பவர்களால்கூட அப்படி வாழ முடியாதே!

இராமர் காலத்தில் இரயிலும் கிடையாது, ஆகவே ரயில் கூடாது என்று இந்த நாளில் தள்ளிவிடமுடியுமா? அல்லது இராமரே ஏராத ரயிலில் நாம் ஏறுவதா? என்று ரயிலில் ஏறுமல் எத்தனை இராமபக்தர்கள் இருக்கிறார்கள். இருக்க முடியும்! இராமர் காலத்தில் இல்லாத ரயிலில் ஏறித்தானே இராமேசுவரம் போகிறார்கள். அதைப்போலவே அரிச்சந்திரன் காலத்தில் ஆகாய

விமானம் இல்லையென்று ஆகாயவிமானம் ஏறுமலா இருக்கிறார்கள். தர்மராஜா காலத்தில் தபால்கார்டு இல்லை, தந்தி கிடையாது என்று இன்று தள்ளி விடுகிறார்கள், கிடையாதே!

எனவே அந்தக்காலம் அந்தக்காலம் என்று பேசுவதும் அந்தக்கால பழக்கங்கள் என்று கூறி அவைகளை அப்படியே பின்பற்ற வேண்டும் என்று பிடிவாதம் செய்வதும் பொருத்தமற்றவைகள் என்பது நன்கு விளங்குகிறது.

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்குத் தேவையானதுதானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்றவேண்டுமே தவிர அந்தக் காலத்துப் பழக்கம என்பதற்காகவும் கண்ணை மூடிக் கொண்டு எதையும் அர்த்தமற்றும், பொருத்தமில்லாமலும் பின்பற்றக்கூடாது.

உலகத்தில் மற்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்றமடைந்தன, இந்த நாடு மட்டுமேதான் எல்லாத் துறைகளிலும் பழம்பெருமை பேசிக்கொண்டும், அந்தக்காலம் என்று கூறிக்கொண்டும் முன்னேறாமல் பின்தங்கிக் கிடக்கிறது. நாமும் மற்ற நாடுகளைபபோலவே எல்லாத் துறைகளிலும் முன்னேறியாக வேண்டும். நாம் அறிவுத் துறையில் முன்னேறியாக வேணடும்.

நாம் அறிவுத்துறையில் முன்னேற்றமடைந்தால் தான் நம்மிடமுள்ள பழமைக் கருத்துக்கள் அகலும், பாசி பிடித்துப்போன கண்மூடி பழக்கங்களும் தொலையும். மடமூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும் என்பதை நாம் உணர வேணடும்.

இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் செய்து கொள்வதும், சீர்திருத்தத் திருமணங்களைப் பரப்புவதும் அறிவுத்துறையில் நாம் முன்னேறுவதற்கான அடிப்படைகளில முக்கியமானதாகும். சீர்திருத்தம் திருமணத்திலிருந்து துவங்குவது, வாழ்வில் நல்லதொரு நிகழ்ச்சியாகும். எனவே இதைக்கண்டு யாரும் அச்சப்படத் தேவையில்லையென்று மீண்டும கேட்டுக்கொள்கிறேன்.

உலகம் அறிவுத்துறையில் எவ்வளவோ முன்னேறி இருந்துங்கூட இந்த நாடு மட்டும் உலக முன்னேற்றத்துடன் ஓட்ட முன்னேறாது பழமையிலே பெருமை கண்டு பின்தங்கிக் கிடக்கிறது என்று குறிப்பிட்டேன்.

இதனை நாம் நாட்டில் தினமும காணும் காட்சிகளிலிருந்தே காணலாம. அண்மையில் வடநாட்டில நடந்த கும்பமேளா என்ற விழா எதைக் குறிக்கிறது? அதில் நடந்த நிர்வாண ஊர்வலம் எதைக் காட்டுகிறது? அல்லது இன்னமும் இந்த நாட்டில் காட்டுமிராண்டித்தனம் மக்களிடம் இருக்கிறது என்பதைத்தானே காட்டும்! இத்தகைய காட்சியைக் காணும் எந்த வெளிநாட்டானும் நம்மைப்பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணுவான்!

இதைப்போலவே, நான் அடிக்கடி குறிப்பிட்டுவரும் கோவைக்கு அடுத்துள்ள காரத்தாமடை என்கிற ஊரில் நடக்கும் அர்த்தமற்ற ஆபாசத் திருவிழாவும் இருக்கிறது! அங்கே அனுமார் ஆவேசமாடும் ஒரு சாமியார் வாயிலிட்டு மென்று கீழே துப்பும் எச்சில வாழைப் பழத்தைப் புசிப்பதால் பிள்ளைப்பேறு கிடைக்குமென்று நம்பி, எத்தனையோ பெண்கள் எடுத்துப் புசித்துவருகிறார்களே! இதெல்லாம் சரியா? இந்தக் காலத்திற்கும் தேவைதானா?

அண்மையில் எங்கோ ஒரு இடத்தில் பாரதப் பிரசங்கம் நடந்ததாம். அதன் கடைசி நாளன்று பீமன் வேஷம் போடுபவன் துரியோதனைக் கொல்வதற்காகப் படுகளம் நடந்தது, அன்று 6 அடி நீளமுள்ள துரியோதனன் உருவம் மண்ணினுல் செய்யப்பட்டிருந்தது. இதனை பீமவேடதாரி வெட்டி விழ்த்தினுன். இதனை சுதேசமித்திரன் பத்திரிகை படம்பிடித்து பெரிதாகப் போட்டுக் காட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட கேவலமான பழக்கங்களையும், அர்த்தமற்ற திருவிழாக்களையும் பொருத்தமற்ற சடங்குகளையும் விட்டொழித்தால்தான் நாம் உண்மையிலேயே முன்னேற முடியும். ஆகவேதான் சீர்திருத்தத் திருமணங்கள் நடப்பதின் மூலம் அறிவுப் பணி நன்கு வேரூன்றி நிலைத்துப் பரவ வழியிருக்கிறதென்று குறிப்பிடுகிறோம.

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கிவிட்டால, நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக்கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய்விடுமே! ஆகவேதான் இப்படிப்பட்ட மணம் செய்துகொள்ளும் இந்த மணமக்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மனதார வாழ்த்துகிறேன.

இந்த திருமணத்தில் தேவாரம் ஒன்று பாடுவார்களா? ஒரு திருவாசகமாவது பாடக்கூடதா என்றும் சிலர் கேட்டதாக நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட திருமணங்களிலே அப்படிப்பட்ட பாடல்களைப் பாடத்தான் மாட்டோம், பாடவும் கூடாது என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துவிடுகிறேன்.

அந்தக் காலத்தில் ஊசி முனையில் நின்றும், ஒற்றைக் காலில் நின்றும் பற்பல விதமாக அகோர தவம் செய்த முனிவர்கள் அனைவரும் ஆண்டவனைப் பார்த்து எதைக் கேட்டார்கள்? மற்ற ஆழ்வார்களும் சரி, நாயன்மார்களும் சரி கடவுளிடம் எதைக் கோரினார்கள்?

மக்கள் வாழவேண்டும் உலகம் உருப்படவேண்டும். வறுமை ஒழிய வேண்டும், உலகத்தில் உண்மை. தழைக்க வேண்டும என எந்த முனிவராவது. எந்தப் பக்தனாவது நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே! பொது நன்மைக்காக் கடவுளை வரம் கேட்ட பக்தர்கள் யாராவது காட்ட முடியுமா? ஒருவரும கிடைக்க மாட்டார்கள்.

எல்லோரும் தங்கள் சுயநலத்தைத்தானே பெரியதாகக் கருதியிருக்கிறார்கள். எனக்கு இந்திர பதவியைக் கொடு' என்றொரு முனிவர் கேட்பார். எனக்குக் காமதேனு வேண்டும், கற்பக விருட்சம் தேவை என்று மற்றொரு தவசி கேட்டிருக்கிறார். மேனகை, ரம்பை, திலோர்த்தமை ஊர்வசி போன்ற தேவலோகத்து நடன மாதர்களின் சுகத்தை யனுபவிகக சொர்க்க வாசகம் தேவை யென்று ஒரு நாயன் மார் கேட்பார்.

வைகுந்த பதவியும் சிவலோக வாசத்தையும் தங்களுக்காகக் கேட்ட அந்த முனிவர்களையும், அவர்கள் பாடியபாடல்களையும் இந்தத் திருமணததில் அழைப்பதும, பாடுவதும் பொருத்தமற்றதுதானே. இங்கே வந்தாலும அவர்கள் தங்களுக்குத்தான் எதையாவது கேட்பார்களே தவிர; நமக்காக ஒன்றும் பேச மாட்டார்கள் கேட்க மாட்டார்களே! ஆகவேதான் இங்கே எந்தப் பக்தரையும் சரி, அய்யரையும சரி நாங்கள் அழைக்கவில்லை, அழைப்பதுமில்லை. அதைப்போலவே நமக்காக எழுதப

படாத பாடப்படாத எந்தப்பாடலையும் பாடுவதில்லை; பாடவும் விடுவதில்லை.

நம்மைப் பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் கவலைப்படும், அக்கறை காட்டும் நண்பர்களைத்தான் நாம் அழைக்கிறோம், அப்படிப்பட்டவர்களால் தானே நாம் முன்னேற வழிவகைகளை காட்ட முடியும், கூற முடியும்!

ஆகவே தேவாரம் பாடவில்லை, திருவாசகம் படிக்க வில்லை, அய்யாரைக் கூப்பிட்டு மந்தியம் ஓதவில்லை என்பதற்காக எவரும் கவலைப் படத் தேவையில்லை என் பதை மறுமுறையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடைசியாக சில பெரியவர்கள் இங்கே அம்மி மிதித்து அருந்ததி காட்டவில்லை, அக்கினி வளர்க்கவில்லை, ஆண்டவனைப் போற்றவில்லை என்று குறைபடுவதற்கும் அர்த்தமில்லை யென்று சொல்லிவிடுகிறேன்.

திருமணத்தில் அக்கினி வளர்ப்பது எதற்காக? திருமணத்திற்கு அக்கினிதேவன் சாட்சியாக இருக்கிறான் என்பதற்குத்தானே? அந்த அக்கினி பகவான் யோக்கியதை என்ன? அருந்ததி என்று ஒரு சினிமாக் கூட வந்ததே. அதைப்பார்த்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், நான் கூறப்போவது.

ஒரு காலத்தில் சப்தரிஷிகள் ஒரு யாகம் செய்தனராம் அந்த யாகத்திற்குச் சென்று அவிர்ப்பாகம் வாங்கிச் சென்ற அக்கினி பகவான் அந்த ஏழு ரிஷி பத்தினிகள் மீதும் காமுற்றானாம். இதனை வெட்கத்தை விட்டுத் தன் மனைவியிடமே கூறினானாம் இந்தக் காலத்தில் எப்படிப்பட்ட கேடுகெட்ட மனிதனுங்கூட தான் கட்டிய மனைவியிடம், தான் பிற பெண்ணின் மீது ஆசை வைத்திருப்பதாகக்

கூறமாட்டான். ஆனால் ஆண்டவனான அக்கினி தன் மனைவியிடம் தான் ரிஷி பத்தினியிடம் காமுற்று இருப்பதை கூறியவுடன் தன் மனைவியையே அதற்கான ஏற்பாடு களையும் செய்யும்படிக் கேட்டானும். அவன் மனைவியும் சப்தரிஷிகளில் ஆறு பேர்களின் மனைவியரைப் போலவே உருவமெடுத்து தன் கணவனின் காமத்தைத் தணித் தாளாம் ஆனால் ஏழாவது முனிவரின் மனைவியான அருந்ததியைப் போல மட்டும் உருவம் எடுக்க முடிய வில்லை என்றும், அதற்குக் காரணம், அருந்ததி ஆதிதிரா விட பெண்மணி என்றும் புராணம் மேலும்தொடருகிறது.

பிறர் மனைவியைக் காமுறும் தீயகுணம் படைத்த அக்கினியையா நம்முடைய திருமணக் காலங்களிலே சாட்சிக்கு அழைப்பது? கூடாது, கூடவே கூடாது ஆகவேதான் அக்கினி வளர்ப்பதில்லை.

இப்படித்தானே மற்ற கடவுள்களும் இருக்கிறார்கள்! புராணங்கள் சொலலுகிறபடியே பார்த்தாலும் எந்தக் கடவுளும் யோக்கியமான கடவுளாகத் தெரியவில்லையே! பிரமன் திலோர்த்தமையை கெடுத்தான். சிவன் தாருகா வனத்து ரிஷி பத்தினிகளைக் காமுற்றான். இந்திரன் அகலி கையையும், சந்திரன் குருபத்தினி தாரகையையும் மகா விஷ்ணு சத்திரன மனைவியையும் கெடுத்தனர் இப்ப டித்தான் புராணங்கள் சொல்லுகின்றன.

இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடான கடவுளரையா நாம் நமது வாழ்வின் வழிகாட்டியாகக் கொள்வது?

காமக் குரோதம் மிகுந்த அக்கினி பகவானை அழைத்து அவனைச் சாட்சியாக வைதது்த் திருமணம் நடததுவது அறிவுக்குப் பொருத்தமானது தானா? அதைப்போலவே

கண்மூடித்தனமாக நடந்து, காமக்களியாட்டங்களில் ஈடுபட்ட மற்ற கடவுளையும திருமணக் காலங்களிலே எண்ணுவதும் கூடாதே! இவைகளை நாம் கூறும்போது சில ஆத்திக நண்பர்களுக்குக் கோபம் ஏற்படலாம்! கோபம் ஏற்பட்டு என்ன பலன்? நாங்களாகக் கதைகட்டி எதையும் கூறவில்லையே!

நாங்கள் எடுத்துக்காட்டி விளக்குவதும ஆபாசங்கள் என்று கூறிக் கண்டிக்கும் ஆண்டவன் திருவிளையாடல் களும் எங்கள் கற்பனைகள் அல்லவே அல்ல! அவைகள் அத்தனையும் பக்தர்கள் பக்தியோடு படித்துப் பாராயணம் செய்து வரும் புராணங்களில் காணப்படுபவைகள் தான என்பதை ஆத்திக நண்பர்கள் உணர்ந்து திருத்தவேண்டு கிறேன்.

கடவுள் என்றும், மதம் என்றும், சாஸ்திர சடங்குகள் என்றும், மக்கள் தங்கள் காலத்தையும் கருத்தையும், நேரத்தையும, நினைப்பையும், உழைப்பையும், ஊக்கத்தை யும், பணத்தையும், பகுத்தறிவையும் சிறிதும் பயன்படுத் தாது பாழாக்குவதைத் தடுத்தாகவேண்டும்!

பழைய காலத்தைப்போல நாம் நடக்க முடியாது நடக்கத் தேவையுமில்லை. புதிய கருத்துக்களைத் தைரியத்து டன் கவனித்து ஏற்று புதுவாழ்வு நடத்த நம்மை நாம் தயாராகக்கொள்ள வேண்டும்.

மக்களைப் பழமைப் பிடியிலிருந்து மீட்டு, பகுத்தறி வுப் பாதையில் நடத்திச் செல்ல திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதும் பாடுபட்டு வருகின்றது.

பழமைக் கருத்துக்களையும், மத மூட நம்பிக்கைகளை யும் அர்த்தமற்ற சடங்குகளையும், கண்மூடி வழக்கங்

களையும் மக்கள் அடியோடு விட்டொழிக்க வேண்டு மென்று தி. மு. க. பல காலமாகவே வற்புறுத்தி வரு கின்றது.

சுயமரியாதைப் பிரச்சாரந்தான், சமுதாய சீர்திருத்த மும் முன்னேற்றமும்தான் தி. மு. கழகத்தின் அடிப்படை வேலையாகக் கருதப்பட்டு வருகிறது.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கருத்துடன் வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என் பதை மக்கள் உணர்ந்து, இனத்தால் ஒன்றுபட்டு வாழும் முறையை மக்களிடையே எங்கள் கழகம் ஏற்படுத்தி வரு கின்றது.

நாம் திராவிடர், நமது இனம் திராவிடம், நமது கலை கலாச்சாரம் இவையிவை என்பதை மக்கள் நன்ருக உணர வேண்டும். அப்போதுதான பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை வேரோடு அழியும், மத மூட நம்பிக்கைகள் இருந்த இடம் தெரியாமல் மறையும், கருத் தற்ற கண்மூடிப் பழக்கவழக்கங்களும் மாய்ந்தொழியும்.

ஆகவே நாமெல்லாம் திராவிடர், நமது இனம் திரா விடம் என்ற உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டுப் பெருகி திராவிட சமுதாயம் நல்வாழ்வு வாழ வழி வகுப்போம்.

நாம் எந்தெந்தக் கொள்கைகளை வலியுறுத்தி பாடு பட்டு வருகிறோமோ அவைகளில் சில இன்று சட்டமாகி வருகின்றன என்று குறிப்பிட்டேன். இதனுல் நமது பணி நாட்டு மக்களுக்கு மிகவும் தே வையானது—அவசியமானது என்பதை நாம் அறிகிறோம். நமதுஎண்ணம் ஈடேறியதைக் கண்டு மகிழ்கிறோம்.

இந்த மகிழ்ச்சியால் வெறும் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் சமுதாயத்துறையில் உள்ள சீர்கேடுகளைப் போக்கவும், மக்களிடையே மேலும் தீவிரமான முறையில் அறிவுப் பணி புரியவும் பயன்படுத்தி பாடுபடவேண்டும்.

சமுதாயம் சீர்திருந்த இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் நல்லதொரு அடிப்படை என்று குறிப்பிட்டேன்.

எந்தக் காரணங்களைக்கொண்டு பார்த்தாலும் நாம் இந்த சீர் திருத்தத் திருமணம் நடத்தும் முறை தவறு என்று எடுத்துக் காட்டவோ அல்லது பழைய முறைதான் சரி என்று வாதிடவோ ஒருவராலும் முடியாது.

இந்நிலையில் நாம் அறிவுத் துறையில் முன்னேறவும் சமுதாயம் சீர்திருந்தவும் அடிப்படையான இத்தகைய சீர்திருத்தத் திருமணங்களைத் தொடர்ந்து செய்துவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# வாழ்வில்...

வறுமை எத்தகைய கோலத்தைத் தரமுடியும் என்பதை எடுத்துக் காட்டவே, அந்த மூதாட்டி விட்டு வைக்கப் பட்டிருக்கக்கூடும்! கால தேவன் எத்தனையோ வண்ண மலர்களை, அழகான அரும்புகளைக்கூட அழித்தொழித்து விட்டு, இந்த 'எலும்புக்கூடு' உடலை அனுமதிப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்! வெறும் சருகு! அதற்குக் காலும், கையும், கண்ணும், அம்மட்டோ! பாழும் வயிறும்!!

அந்தக் காய்ந்த வயிறுக்கு யாராவது புண்யவதி புளித்த கஞ்சி தந்துவிட்டால், பெரிய விருந்துதான்! விருந்து இரண்டு நாளைக்கு ஒரு தடவை கிடைக்கும், புண்யவதியை அவள் புருஷன் கொடுமைப் படுத்தாதிருந்தால்!

மற்ற நாட்களில் தண்ணீர், காற்று அதிகமாக ஏற்றுக் கொள்ளவும் கிழவிக்குச் சக்தியில்லை. பட்டினியோடு நீண்ட காலமாப் பழகி விட்டதால் கிழவியின் கண்களிலே, நீர் வருவது நின்று நெடுநாட்களாகிவிட்டன!

இரண்டு குழிகள்! அவ்வளவுதான்! கண்களாகத் தான் அவை முன்பு இருந்தன!

மைகூடத் தீட்டி அழகுபார்த்ததுண்டு—ஆனால் அது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு—'அவர்' இருந்த போது.

அவர் தந்த செல்வம் 'அக்கரை' சென்று ஆண்டு இருபதுக்கு மேலாகி விட்டன—அரும்பு மீசைக்காரனாகச் சென்றான்—அன்னை அப்போது அழ முடிந்தது—இப்போது? அதற்கும் சக்தி வேண்டுமே, இல்லை!

துக்கம்—ஏக்கம்!

நிலைத்துவிட்ட திகைப்பு!

தரித்திரத்தின் கடைசிக் கட்டம்

இவைகளின் 'நடமாடும்' உருவம், அந்த மூதாட்டிக் கிழவியைக் கண்டால், "ஐயோ பாவம்!" என்று பரிதாபம் பேசியகாலம்கூட மடிந்து போய் விட்டது—எத்தனை நாளைக்குத்தான் பரிதாபச் சிந்து பாடியபடி இருக்க முடியும்!!

மலையின கெம்பீரம்— மதியின் அழகொளி—மேகக் கூட்டத்தின் மோகனம் —இவைட்பற்றியே, பேசிக் கொண்டும் ரசித்துக் கொண்டும், சதா சர்வகாலமும் இருக்க முடிவதில்லையே, இந்தச் சஞ்சல மூட்டையைப் பற்றியா, சிந்தனையை எப்போதும் செல விட்டபடி இருக்க முடியும்!

'பாட்டியம்மா' பாட்டி' ஆகி, பிறகு 'கிழவி'யாகி பிறகு ஏ! யாரது!' ஆகி, பிறகு போ, போ! போ!' என்றாகி, பிறகு 'இதேதடா தொல்லை' என்றாகி, 'பெரிய சனியன்' எனறாகி, பிசின், இலேசில் விடாது' என்றாகி, இப்போது கவனிப்பார், கவலைப்படுவாரற்ற ஓர் உருவமாகி விட்ட நிலை!

சுவரிலே இருக்கும் சித்திரத்தோடு யார் பேசு கிறார்கள்!

ஆனால், கிழவியோ, யார் கிடைத்தாலும் விடுவ தில்லை!

பசி—பட்டினி—இதைக் கூறவா? அல்ல. அல்ல யார் போவது.. அப்பா...அடி அம்மா...அலமேலா—ஆண்டியப்பனா—யாரடப்பா—

நான்தான்—என்ன, என்னா—வீட்டுக்குப் போ—வள்ளி இருக்கா தண்ணி கொடுப்பா—

ஆண்டியப்பன் தானா......டே அப்பா! எனக்குத் தண்ணியும் வேணும், சோறும் வேணும், சொக்கி கூழ் கொடுத்தா; போதும்...ஒரு கடுதாசி எழுதிக் கொடுடா அப்பா.. கோடித்தெரு கோபாலன், 'அக்கரை' போறா னாமே, அவனிடம் கொடுத்தனுப்பனும்...வாடா அப்பா—புண்யமடா உனக்கு...ஒரு நாலு வரி எழுதிக் கொடு...

ஆண்டியப்பனுக்குக் கிழவி கூறப்போவது தெரியும். அவன் சென்றுவிட்டான், வேகமாக—வேறே வேலை கிடையாது இந்தப் பைத்தியத்துக்கு என்று முணு முணுத்தபடி,

எதிரிலேயும் பக்கவாட்டங்களிலும் தடவிப் பார்த்துப் பார்த்து, ஒரு உருவமும் கையில் தட்டுபடாததால், கிழ விக்கு அவன் போய்விட்டான் என்பது தெரிந்தது, என்ன அவசரமான வேலையோ பாவம்!—என்ற எண்ணம் கிழவிக்கு...கோபமல்ல!

கோபம் குடிபுக, அந்த மூதாட்டியின் நெஞ்சிலே இடம் ஏது! சோகம் கப்பிக்கொண்டிருந்தது!

'அக்கரை'யில் மூதாட்டியின் மணி!

இங்கு இந்த எலும்புக் கூடு!

இடையே, நாடு, காடு, மலை, வனம், வனாந்திரம், கடல்!

எண்ணம், விநாடியிலே எதையும் தாண்டும், எலும்புக்கூடு. எங்கே அந்தச் சக்தியைப் பெறுவது! புதைக்குழிக்குச் செல்லவே சக்தியில்லை!

யாராவது கிடைக்கமாட்டார்களா என்று தேடித் தேடி அலுத்துப்போய், தன் குடிசையில் போய்ச்சுருண்டு விழுந்துவிடுவது வாடிக்கை.

சொந்தக் குடிசைதான்!

அது வேறு யாருக்கு வேண்டும்?—அதனால் கிழவியிடமே இருந்தது!

சரிந்துபோன சுவர்.. பிய்ந்துபோன கூரை... அதன் நிலைமையும் கிழவியின் கோலமும் ஒரேவிதம்.

அக்கரையில், 'மணி'...'மார்க்' ஆகி; மாதா கோவில் தோட்டத்தில வேலை செய்து ஒடிந்துபோய், பிறகு உல்லாச உலகுக்குக் கயவன் ஒருவனால் இழுத்துச் செல்லப்பட்டு, கள்ளாகி, அடிபட்டு, உதைபட்டு, செத்தும் போய் விட்டான்.

மூதாட்டிக்கோ, 'மணி' மளிகைக் கடை வைத்திருக்கிறானோ, மலர்த்தோட்டததிலே வேலை பார்க்கிறானோ, மாடு மனை மனைவியோடு சுகமாக இருக்கிறானோ...எவ்விதம் இருக்கிறானோ என்ற எண்ணம். நல்லவிதமாகத்தான்

இருப்பான் என்ற எண்ணம்...நல்லவிதமாக இருக்கவேண்டும் என்றுதானே தாய் உள்ளம் எண்ண முடியும். அதனால்!

'பாவிப்பய, ஒரு காலணாக் கடுதாசி போடக்கூடாதா? என்று எண்ணி எண்ணி கிழவி ஏக்கம்பிடித்து அலைவது கண்டு, முதலில் பலர் சமாதானம் கூறிப்பார்த்தனர் கார்டு விலை மூக்காலணாக்கூட ஆகி விட்டது...பாவிப் பயமகன் காலணாக் கடுதாசி போட்ட பாடில்லை...சமாதானம் கூறுவதைக்கூட மற்றவர்கள் நிறுத்திக் கொண்டனர். கிழவியோ, 'அக்கரை' போகிறவர்களிடமெல்லாம் கடுதாசி, கொடுத்தனுப்புவதை நிறுத்த வில்லை. சிரஞ்சீவி மணிக்கு...என்று துவங்கி, மூத்தபமா என்று முடியும் அந்தக் கடிதம் ஒவ்வொன்றும், எவ்வளவு கல்நெஞ்சத்தையும் கரைத்துவிடும், அவன்தான் கல்லறை சென்று விட்டானே...பலன் என்ன கிடைக்கும்!

ஓயாமல் கடிதங்கள்!

அந்தக் கிராமமும் அடிக்கடி, 'அக்கரைக்கு' அரும்பு மீசைகளை' அனுப்பியபடி இருந்தது.

நஞ்சை இருந்தது...புஞ்சையும் உண்டு! கரும்பு பயிராகும், கால்வாய்ப் பாசனமும் உண்டு. ஆனால் அவ்வளவும், நாலைந்து பெரிய புள்ளிகளுக்குச் சொந்தம், அவர்களோ நாடாளும் நாயகர்கள் வரிசையில் இருந்தவர்கள் ' எனவே தலை நகரில் வசித்து வந்தனர்.

அரும்பு மீசைகள், அக்கரை சென்று ஐந்தாறு ஆண்டு பாடுபட்டால் ஆயிரம் ஐந்நூறு மீதம் பிடித்து அரையோ காலோ ஏகர் வாங்கி, பிறகு ஏதோ கால்

வயிற்றுக் கஞ்சிக்குக் குறைவில்லாமல் வாழலாம் என்று ஆசைப்பட்டுத்தான் சென்றனர்!

அவ்விதம் சென்றவர்களிலே ஒருவன்தான் மணி.

மணி என்பது செல்லப் பெயர்...முழுப் பெயர் சிவ சுப்பிரமணியம்!

'அவர்' இருந்தால் ஆயிரம் ஆயிரமாகக் கொட்டிக் கொடுத்தாலும் உன்னை 'அக்கரைக்கு' அனுப்பமாட்டார் என்று கூறிக் கதறி, பிறகு மணியின் நெற்றியிலே பிள்ளையார் கோவில் ஐயர் கொடுத்த (ஒரு அணாவுக்கு) விபூதியைத் தடவி, ஆயிரம் தெய்வங்களை வேண்டிக் கொண்டு விடை கொடுத்தனுப்பினாள் கிழவி.

எப்போதாவது கொஞ்சம் 'போடும், வழக்கம் உண்டு மணிக்கு!

அக்கரை சென்றதும், அந்த ரகமானவர்களின் 'நேசம்' அதிகமாகி, 'போடுவதும்' வேகமாக வளர்ந்தது— அது அவனைப் படாதபாடு படுத்திவிட்டது...கல்லறை அவனை அழைத்துக்கொண்டது.

கிழவிக்குத் தன் 'மகன்' அக்கரையில் இருப்பதாக நினைப்பு.

,யாரிட்ட தீவினையோ, என்னை அவன் மறந்து விட்டான்' என்று எண்ணி வருந்தினாள்,

ஆயிரம் தெய்வங்களை மறுபடியும் மறுபடியும் வேண்டிக் கொண்டாள். தெய்வங்களுக்கு அதுதானா வேலை! ஒரு திருவிழா முடிந்ததும் மற்றோர் திருவிழாவுக்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்வதற்கே காலம் போத

வில்லை...அக்கரை சென்றவன் மனதிலே புகுந்து, இந்த 'ஐயோ பாவத்'தின் மீது பாசம் ஏற்படச் செய்யவா நேரம் கிடைக்கும்! அதிலும் கடல்கடந்து செல்ல வேண்டும்!

அந்தக் கிராமத்துக்குப் பெரிய பட்டினங்களெல்லாம் பொறாமைப் படக்கூடிய பெயர் இருந்தது...

## பொன்னூர்

ஜல்லடை போட்டுச் சலித்தெடுத்தால்கூட ஒரு குண்டுமணி பொன்னும் கிடைக்காத மட்டிக்காடு! அதாவது பிள்ளையார் கோவில் சாமி வீடு தவிர, ஐயர் வீட்டிலே 'சோதனை'யிடத் துணிவுகொண்ட 'பாவிகள்' உண்டா! மற்ற இடங்களிலே குண்டுமணி அளவு தங்கம் கூடக் கிடையாது...பெயர் மட்டும் பொன்னூர்!

பொன்னூருக்குப் பூர்வீகப் பெருமைகள் உண்டு!

சீதாபிராட்டியாரை மயக்கிய மாயமான் ஓடிவந்த போது கிளம்பிய, தூசி' அங்கு படிந்ததால் பொன்மயமாகி விட்டதாம் அந்த ஊர்!

மாரி கோவில் திருவிழாவின் போது ஆடு வெட்டி ஆண்டியப்பன் கதை படிப்பான். அப்படிப்பட்ட பொன்னூர் அக்கரைச் சீமைக்குக் கூலிகளை அனுப்பும் 'பாக்கியம்' பெற்று விட்டது. அந்தத் தொகுதியிலே வெற்றி பெற்ற எம். எல். ஏ. கூட, கடல கடந்த இந்தியர் பாதுகாப்புக் கமிட்டியில் ஓர் உறுப்பினர் கமிட்டி கூடும் போது நாளொன்றுக்குப் பதினெட்டு ரூபாய் 'படிச்' செலவுகூடப் பெற்றுவந்தார். 'அக்கரை'ச்சீமைக்கு 'அரும்பு மீசை' கிளம்பும் போதெல்லாம்கண்ணீரும் கம்பலையுமாகக் கிழங்கள் கூடிக் கூடிப் பேசும்.

போனதும் கடுதாசி போடுகிறேன்!

வீணு, ஏன் மனதை அலட்டிக்கிறே!

மாசாமாசம் தவருமப் படிக்குப் பணம் அனுப்பிவைக்கிறேன்.

மாடு, கண்ணு, ஜாக்கிரதை!

மாரியம்மன் பண்டிகைக்கு, கிடா பலிகொடுக்க மறந்து விடாதிங்க!

இவ்விதமெல்லாம் 'தைரியம்' கூறிவிட்டுதான் செல்கிருர்கள் அரும்பு மீசைக்காரர்கள்—"உன் மகனும் கிளம்பி விட்டாஞே...—" என்று கேட்கும்போதே, கிழவிக்குத் தன் மகன்அக்கரைக்குப் புறப்பட்ட நாளின் நிகழ்ச்சிகள்கவனத்துக்கு வரும், இவனுக்காவது காளியாத்தா நல்ல புத்தி கொடுக்க வேணும் என்று வாழ்த்துவாள்—மனதுக்கள். அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, தன் மகனை எப்படியாவது கண்டுபிடித்து 'கடுதாசி,யைக் கொடுத்து, ஒரு காலணுக் கடுதாசி' போடச் சொல்லும்படி வேண்டிக் கொள்வாள். ஆகட்டும் பார்க்கலாம்—இந்தச் சீமையிலே அவன் எந்த மூலையிலே இருக்கிருஞே, நான் எந்தக் கோடியிலே வேலை செய்யப் போறஞே, யார் கண்டாங்க,இருந்தாலும் கண்டா கட்டயமாகக் கடுதாசியைக் கொடுத்து, புத்திமதி சொல்றேன், என்று வாக்களிப்பான், கப்பலுக்குக் கிளம்பு பவன், கண்ணுடா நீ! தங்கமடா நீ!—என்று கிழவி வாழ்த்துவாள். பணம், சில குடிசைகளுக்கு வந்தது! கடிதம் பலபேருக்கு வந்தது. சிலர், 'நோய் நொடியுடன்' திருப்பி விட்டனர்!

கிழவிக்கு மட்டும், காலணுக் கடுதாசி கிடைக்கவில்லை —திரும்பியவர்களிடமிருந்து, மகனைப் பற்றிய செய்தியும் கிடைக்கவில்லை.

அன்று கிழவிக்கு, வழக்கமான வேலை கிடைத்து விட்டது—வண்டியோட்டி வரதன், அந்தப் பக்கத்திலே 'பஸ்' ஏற்பட்டுவிட்டதால், நொடித்துப் போனன்—ஆக வண்டி ஓட்டும் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டு, 'அக்கரை' போக தீர்மானித்து விட்டான்— அவனிடம் 'கடுதாசி' கொடுத்தனுப்பும் வேலை, கிழவிக்கு.

"அவ குலுங்கி மினிக்கித் திரியும் போது எனக்குத் தெரியும், அவகெட்டுப் போவா என்பது" என்று கூறுவார்கள் தலை நரைத்தவர்கள், வள்ளியைப் பற்றி வள்ளி தவறியவள்!

ஆடு வெட்டி ஆண்டியப்பன் தாலி கட்டி வள்ளியைப் பெறவில்லை—தாலி கட்டிய தாண்டவன் காலமான பிறகு வள்ளி நெல் குத்தி ஜீவித்து வந்தாள். பக்கத்துக் கிராமத்திலே நெல் அரைக்கும யந்திரம அமைந்த பிறகு அவளுக்கு பிழைப்புக்கு வழி அடைத்துப் போய் விட்டது. ஆண்டியப்பன் அவளை ஜாடையாகக் கவனிக்க ஆரம்பித்தான்— வள்ளி, "நாசமாகப் போவான் மாரிசரியான கூலிகொடுக்கப் போகிறு பார்" என்று சபித்தாள்—அவன் அஞ்ச வில்லை— அல்வ, "அண்ணன்" என்று முறை கொண்டாடி, அரை கால் கடன் கேட்டுப் பெற்று வந்தாள். அவன வட்டி கேட்கவில்லை, அசலைப்பற்றியும் கவலைக் காட்டவில்லை— அவள் புரிந்து கொண்டாள் — வெறுப்பாக இருந்தது—ஆனால் எவ்வளவு காலம் வறுமையுடன் போராட முடியும் — "ஐயயோ! வேணுமுங்கோ" என்று கொஞ்சும் குரலில் தொடங்கி' "எப்பவும் கைவிட மாட்

டாயே!'' என்று கொஞ்சும் குரலில் முடிந்தது அவளுடைய வீழ்ச்சி!

வள்ளிக்கு, நாலு எழுத்து எழுதப் படிக்கத் தெரியும்.

அவளிடம் சென்று, ஆயிரம் கண்ணே! கற்கண்டே போட்டு, கிழவி எழுதச் சொன்னாள்.

காளியாயி காடாட்சத்தாலே நான் இன்னும் உசிரை வச்சிக்கிட்டுத்தான் இருக்கிறேன். நான் ஒருத்தி இருக்கிறேன் என்கிற நினைப்பே உனக்கு மறந்து போச்சா. உன்னைக் கண்ணாலே கண்டுச் செத்துத் தொலைக்கத்தான் நான் காத்திட்டு இருக்கிறேன். நாலு நாளைக்கு ஒரு தடவை கூடச் சோறுகிடையாது. நான் இப்பவோ பின்னையோன்னு இருக்கிற இந்தச் சமயத்திலே கூட நீ ஊர் திரும்பாமல் இருக்கிறது தர்மமா! ஒரே ஒருதடவை வந்து போ. உன்னைக் காணவேணும் என்ற ஆசை என்னைக் கொல்லுகிறது. நான் கண்ணை மூடறதுக்குள்ளே ஒருமுறை பார்த்தாகணும் இங்கே நான் அனுபவிக்கிற தரித்திரம் சொல்லி முடியாது ஒரு அஞ்சோ பத்தோ அனுப்பினா, நாலைந்து கோழி வாங்கி வளர்த்து' முட்டை வித்து பிழைச்சிக்காலம்—நான் சாப்பிட்டதுபோக மிச்சம் கூடக்கிடைக்கும்—பனிக்காலத்தில் உடல் வெடவெடன்னு ஆடிப் பிராணனே போயிடறமாதிரி ஆயிடுது ஒரு கம்பளிப போர்வை அனுப்பினா நல்லது.

கிழவி சொல்லிக்கொண்டே வந்தாள் —வள்ளி எழுதிக் கொண்டே இருந்தாள்.

"இன்னுமா என்ன எழுதணும்—பெரிய பாரதமே எழுதியாச்சி'' - என்று சலித்துக்கொண்டாள் வள்ளி.

"கண்ணு! இன்னும் ஒரே ஒரு சங்கதி எழுதிடு'' என்று கெஞ்சினாள் கிழவி.

"சொல்லித் தொலை" என்றாள் வள்ளி.

கிழவி சொல்லத் தொடங்கினாள். உன்னாலே பணம் காசு அனுப்ப முடியாவிட்டால் பரவாயில்லை. நீ இங்கே வந்து சேர்ந்தா போதும் உன்னைக் கண்ணாலே பார்த்தாலே என் கஷ்டம் அத்தனையும் தீர்ந்து போகும். அடுத்த கப்பலுக்கே பொறப்படு."

வள்ளி, கட்டாயப்படுத்திக் கிழவியை முடிக்கச் சொன்னாள்.

கடிதத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினாள் கிழவி வரதன் குடிசைக்கு.

இதுபோல எத்தனை முறை அனுப்பினோம்—எவ்வளவு உருக்கமான கடிதங்கள்—எத்தனை சாமிமீது ஆணையிட்டு எழுதினோம்—ஏனோ அவன் மனம் துளிகூட இரங்கவில்லை இந்தத் தள்ளாத வயதிலே என்னைத் தவிக்க விட்டு விட்டு அக்கரையிலே சுகமாக இருக்க, எப்படித்தான் அவனுக்கு மனம் வந்ததோ—என்றெல்லாம் எண்ணியபடி கிழவி சென்று கொண்டிருந்தாள்.

கடிதங்களைப் படிப்பதேயில்லையா—படித்துப் பார்த்தால், பகையாளியாக இருந்தால்கூடப் பரிதாபம் பிறக்குமே.

சரியாகப் படித்திருக்கமாட்டான்—ஒரு கணம் உருகுவான், மறு கணமே மறந்துவிடுவான்—விளையாட்டுச் சுபாவம்—அல்லது வேலை அவ்வளவு கடினமோ, கடிதம் போடக்கூட கிடைக்காதோ—என்ன மாயமோ, என்று என்று எண்ணிக்கொண்டே சென்றாள்.

"பாட்டியம்மா பாதை ஓரமாகப் போ...எதிரே காளைமாடு வருது...என்று அன்புடன் கூறினன். கிராமத்துக்குப் புதிதாக வந்து குடியேறிய பாதிரியப்பன்.

கிராமத்தில் வைத்தியசாலை நடத்திக்கொண்டு, பச்சிலைகளைச் சேகரித்து ஏதோ ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்தான் பாதிரியப்பன். கிராமத்தில் நல்ல மதிப்பு, கிழவியைப் 'பாட்டியம்மா' என்று அழைக்கும் ஒரே ஆசாமி, பாதிரியப்பன் தான்.

'டாக்டரய்யாவா' என்று கேட்டுக்கொண்டே, அவன் கையைப் பிடித்துக்கொண்டாள் கிழவி, அவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது. கடிதத்தை மகன் சரியாகப் படிக்கிருனே இல்லையோ என்ற சந்தேகம் போய்விட்டது. எழுதிக்கொடுக்கிருர்களோ இல்லையோ என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டது எனவே கடிதத்தை எடுத்து டாக்டரிடம் கொடுத்து, அக்கரையிலே இருக்கிற என் மகனுக்கு அனுப்ப இந்தக் கடுதாசி—படித்துச் சொல்லுங்கோ டாக்டர் அந்தச சிறுக்கி கிறுக்கினு; சரியா இருக்குதான்னு பார்க்கலாம் என்று சொன்னுள். டாக்டர் கடிதத்தைப் பிரித்தார்—சிரிப்பு வந்து விட்டது!

,என்ன டாக்டரு! சிரிக்கறிங்க'

'யார் பாட்டியம்மா கடுதாசி எழுதி கொடுத்தது'

,அதுதான்—வள்ளி—ஒருமாதிரியானவள்னு ஊர்லே பேசுவாங்களே, அந்தக்குட்டி அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும்'

'போக்கிரிப் பொண்ணு' பாட்டியம்மா அந்த வள்ளி கடுதாசியிலே எழுத்தே கிடையாது கோலம் போட்டு வைத்திருக்கிரு...!

'என்னுது...கோலம் போட்டிருக்கிருளா...பாவி நான் சொல்லிக்கொண்டே இருந்தேன் அவ எழுதிக்கிட்டே இருந்தா...'

'உன்னை அந்தப் பொண்ணு ஏமாற்றிவிட்டிருக்கா இருக்கட்டும் பாட்டியம்மா, நான் பார்த்து கண்டிக்கிறேன்.

இப்பத்தானே எனக்கு சூட்டமம் புரிந்தது. என் மகன் பேரிலே கோபித்துக் கொண்டேன். நானு இந்தச் சூட்டமம் தெரியாததாலே, இந்தப் படுபாவிங்க ஒவ்வொருத்தரும் நான் கடுதாசி எழுதிக் கொடுக்கச் சொன்னபோதெல்லாம் இந்த வள்ளி செய்ததுபோலச் செய்துதான் என்னைஏமாத் தியிருக்காங்க. என ஆசை மகனுக்கு ஒரு கடுதாசியும் போய்ச் சேர்ந்திருக்காது. அந்தக் கோபம என மகனுக்கு அதனுலேதான் காலணு காடுதாசி கூட அவன போடல்லே டாக்டரய்யா இப்படி ஒரு கிழவியை ஏமாததிடலாமா. நீங்களே சொலலுஙக இது தர்மமா

வருத்தப்படாதீங்க பாட்டியம்மா—சாய்ந்தரமா வீட்டுக்கு வாங்க, நான் கடிதம் எழுதித தருகிறேன.

டாக்டரை வாழ்த்திக்கொண்ட கிழவி தன் குடிசைப் பக்கம சென்ருள்.

வள்ளி வீட்டுக்குப் பாதிரியப்பன் சென்று, சற்றுக் கோபமாகவே கண்டித்தான்.

'அது ஒரு பைத்தியம் டாக்டரய்யா! நான் மட்டு மில்லே. நம்ம கிராமத்திலே யாருமே, கிழவி கடுதாசிஎழுதச் சொன்னு,ஏதாவது கிறுக்கித்தருவாங்க அதுக்கு மூளை சரி யில்லே; அதனுலே, இப்படி ஓயாம, கடுதாசி எழுதிக் கொடு கொடுன்னு, உசிரை வாஙகும அதனுலேதான் நான்

கோலம் போட்டேன். தடபாளண்ணிடாதீங்க அக்கரையில் அதுக்கு மகனும் இல்லே மகளும் இல்லே. அவன் எப்பவோ செத்துப்போயிருப்பான் உயிரோடு இருந்தா இத்தனே காலமுமா ஒரு காலணு கடுதாசி போடாதிருப்பான். இங்கே இது பைத்தியம் பிடித்துப்போயி, இப்படித் தலேவிரி கோலமா இருக்குது. டாக்டரய்யா. நீங்க ஒண்ணும் வித்யாசமா எண்ணிட தீங்க. அது பைத்தியம்' என்று வள்ளி சமாதானம் கூறினுள். டாக்டருக்குத் திருப்தி ஏற்படவில்லே.

'என்ன காரணம் சொன்னுலும், நீ செய்தது தப்பு வள்ளி ஒரு தள்ளாத கிழவியை இப்படி ஏமாத்துவது பாபம்' என்ருர்.

'ஐயோ, ஐயோ...நீங்க உலகம் தெரியாதவரு அந்தக் கிழத்துக்குப் புத்திப் பேதலிச்சுப் போயிருக்குதுங்க. அதுக்கு மூளே சரியா இருந்தா ஏன் அக்கரை போனவனே நினேசசுக்கிட்டே கிடக்கேணும்இப்படி ஐயா! அமபோன்னு பிச்சை எடுத்துப் பிழைக்க வேணும மலேயாட்டமா இருக்கிருனே,'மற்ருெரு மகன் அவனுேடு போய் இருந்துகிட்டு வயிருரச் சாப்பிடக் கூடாதா நிம்மதியா கிடக்கலாமே' என்ருள்.

'மற்ருெரு மகனு? கிழவிக்கா? என்று ஆச்சரியத்துடன் கேட்டாஙு பாதிரியப்பன.

நீஙக கிராமத்துக்கு.புதுசுதானே தெரிஞ்திருக்காது கிழவிக்கு இனெருெ மகன இருக்கிருன் பெரிய அமதஸ்து இல்லேன்ஞலும் வயிருர கஞ்சி ஊத்தக் கூடியவன் தான் சமுசாரி அடுத்த கிராமத்திலே இருக்கிருன் சன்ஞ சின்னு பேரு என்று விவரம கூறிக்கொண்டே இருக்கும்போது தொலேவிலே ஆணடியப்பன் வருவதைக் கண்டு அதோ

அது வருது, மூக்கு மேலே கோபம் அதுக்கு நாம்ப கனங்க மத்து பேசிக்கிட்டு இருந்தாக்கூட, என்னமோ ஏதேன்னு சந்தேகப்பட்டுக்கிட்டு சண்டைக்கு வந்துவிடும். நீங்க போய்வாங்க டாக்டரய்யா—பக்கத்துக் கிராமம்—சன்னாசி அவனையே கேட்டுப்பாருங்க, கிழவியோட சமாசாரம் புரிந்துபோகும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

0 0 0

சன்னாசி பெரிய குடும்பஸ்தன்—நாணயமானவன்.

பெரிய வைக்கோறபோரை சரிப்படுத்திக் கொண்டிருந்தான். டாக்டர் அவனைப் பார்க்கச் சென்றபோது!

"ஆமாங்க! என் மானத்தை வாங்கவே அந்தக் கிழம் அப்படிச் செய்வது, தலை இறக்கமாகத்தான் எனக்குயிருக்குது. தடியாட்டமா நான் இருக்கிறேன். சோத்துக்கு துணிக்கு குறைச்சல் கிடையாதுங்க இங்கே வந்து விழுந்து கிடன்னு ஆயிரம் தடவை வந்து கெஞ்சிக் கேட்டாச்சிங்க' ஓரே பிடிவாதமா வரமாட்டேங்குது—அங்கே பட்டினி கிடக்குது—பிச்சை எடுக்குது—எனக்கு அவமானம் தாங்க முடியலிங்க."

"என்ன விரோதம் உன்னிடம் உன் சொந்த தாயார் தானே?"

"என்னைப் பெத்தவங்கதான். குழந்தையிலேயே என்னை இங்கே கொடுத்துவிட்டாங்க — இங்கேன்னா இதுவும அன்னியரில்லே, அசலாரில்லே—எங்க சின்னம்மா வீடுதான.

"உங்க சின்னம்மாவிடம் விரோதமா?"

"ஒரு இழவும் கிடையாதுங்க. ஆனு இங்கே நான் வந்ததிலே இருந்து, எங்கஅம்மா காலடி எடுத்து வைக்கிற தில்லே, அது என்ன வைராக்கியமோ போங்க. என் கல்யாணத்துக்கூட பத்துபேர் வர்ரதுபோல வந்துவிட்டு ஒரு வேளை கையை நனைச்சிகிட்டுப் போனதுதான். நான் காலிலே விழுந்து கும்பிட்டுக் கூப்பிட்டாக்கூட வரமாட்டேங்குது—காரணம சொல்றதில்லே. எனக்குச் சில சமயம் வருகிற கோபம், அதை வெட்டிப்போட்டுவிடலான்னுகூட தோணுது போங்க. 'உங்க அம்மா அங்கே பிச்சை எடுத்துக்கிட்டு இருக்கிருடப்பா. ஏன் அப்படி அலையவிடறே'ன்னு யாராவது கேட்டா, என் மனசு என்னு பதறிப்போகும நீங்களே சொல்லுங்க. இப்படி என்மனசை எறியச் செய்துகிட்டு, அங்கே கிடக்குது. நான் என்ன செய்ய?"

"சன்னுசி, கோபிக்காதே! உன் சம்சாரத்தோடே ஏதாச்சும்...

"அவ 'அப்பிராணிங்க'—மாமியார் காலிலே விழுந்து கும்பிட்டா புண்ணியமனு எண்ணுகிறவ. அவளும் அவளாலே ஆனமட்டும் கூப்பிட்டுப் பாத்தாச்சி. நம்ம 'கொழந்தை'கள் கூப்பிடடே வரலே, போங்களேன்."

"என்னப்பா இது அதிசயமா இருக்கு."

"அதிசயமா? அக்கிரமம்னு சொல்லுங்க டாக்டரய்யா! வர்ர பழி வரட்டும்னு அதை அடிச்சுக் கொண்ணுபோடலாம்னுகூட ஆத்திரம் வருது தெரியுங்களா?"

டாக்டர் பாதிரியப்பனுக்குப் பச்சிலை ஆராய்ச்சியிலேகூட மனம் செல்லவில்லை. இந்தக் கிழவியின் விசித்திரப் போக்கு அவருக்கு மனக்குழப்பமே உண்டாக்கி விட்டது. கிழவியைக் கண்டே கேட்பது என்று தீர்மானித்தார்.

0 0 0

'அவன் பேச்சை மட்டும் எடுக்காதீங்க...'

'அவன் நல்லவனு இருக்கானே பாட்டி.'

'தங்கமானவன்...அவன் சம்சாரமும் குணசாலி...எவ்வளவோ அன்பாத்தான் என்னை கூப்பிடறுங்க...ஆனு...'

'என்ன அனுவும் ஆவன்னுவும்...'

'அவன் என் மகனில்லிங்க...'

'உன் மகனில்லையா...உனக்கென்ன வள்ளி சொன்னதுபோல, மூளை குழம்பி இருக்குதா... உன் மகன் இல்லையா...'

'நான் பெத்தவன்தான். ஆனு...டாக்டரய்யா இதை மனசோடே போட்டு வையுங்கோ. முக்கியமா அவனுக்குத் தெரியப்படாது. தெரிந்தா குடும்பத்துக்கே ஆபத்து. நான்தான் பெத்தேன். ஆனு, அவன் பேய் மகன்'

'பைத்தியமேதான் உனக்கு. பேய் மகனுவது பூதத்தின் மகனுவது...என்ன கிழவி உளறிக் கொட்டறே.''

'உங்களுக்கெல்லாம என்ன தெரியும்? இந்தக்காலத்துப் பிள்ளைங்க. சன்னுசி, பேய்க்குப் பொறந்தவன். அவனுக்கும் தெரியாது. கிராமத்திலே யாருக்கும் தெரியாது. இப்ப உங்ககிட்டே சொல்கிறேன். பேய்க்குப் பொறந்தவன் சன்னுசி. அதனுலேதான், பொறந்த மூணு மாசமே அவனை என் தங்கச்சிக்குத் 'தத்து' கொடுத்து விட்டேன்.'

''பாட்டி! உனக்கு மூத்தமகன் அக்கரை போயிட்டதுக்கத்தானே மூளை குழம்பியிருக்கு...

கேள் டாக்டரய்யா—மூளையாவது குழம்பறதாவது... மணி பொறந்து ஐந்து வருஷத்துக்குப் பிறகு, இவன், பொறந்தான்... இவன் என் வயித்திலே கருதரிக்கிறதுக்கு முந்தி' என்னை திருக்குளத்துப் பேய் பிடிச்சிடுச்சி, பேயை ஓட்ட ,அவரு' படாதபாடு பட்டாரு— செலவு கண்மண் தெரியாமச் செய்தாரு-அந்தப் பாழாய்ப்போன பேய்ஒழிய மாட்டேன்னு சொல்லிடுச்சு. சூடு வைச்சிப் பார்த்தாங்க, தலைமுழுக்கு, வேப்பஞ்சேலைகட்டி மாரியம்மன் கோயிலிலே சுற்றிவர்ரது, ஒண்ணு பாக்கி இல்லை, திருக்குளத்துப் பேய் எதுக்கும் மசியிலே, எனக்குப் பேய் பிடிச்சிருந்தபோது தான் கருதரிச்சிது. இத்தப் பய பொறந்தான்—அவனைத் தான் நீங்க பார்த்திங்களே—இலட்சணமாயிருப்பான்—அவன் பொறந்ததும், ஊர்க்கோடியிலே இருந்த ஒரு பிரம் மாண்டமான புளியமரம் வேரோடச் சாய்ந்து கீழே விழுந் தது ... இடி இடிச்சி, மாரியம்மன் கோவில் கோபுரத்திலே விழுந்து அதை இடிச்சுத் தள்ளிவிட்டுது. எங்க வீட்டிலே இரண்டு படி கறக்கும் அருமையான பசு மாடு அது 'காவ் காவ் 'னு கதறிகிட்டே கீழேதொபீல்னு' விழுந்து செத்துப் போச்சு அப்பப்பா, அவன் பொறந்ததும் ஊருக்கே பெரிய ஆபத்துன்னு வையுங்களேன், அப்படியெல்லாம் நேரிட் டது.

இதோடு போச்சா; அவரு, அவங்க அப்பாரு, நல்லா இருந்தா மனுஷனுக்குக் காச்சல் கண்டு,வாயிலே 'நொப்பும் நொரையும் தள்ளி, கைகால் இழுப்பு வந்திடுச்சி, எனக்கும் பயம் சந்தேகம், துக்கம். பூசாரியைக் கூப்பிட்டு, என் னய்யா இதுன்னு கேட்டேன். "எல்லாம் திருகுளத்துப் பேய் செய்கிற வேலை" ன்னு சொல்லிவிட்டு, அவன் சொன்னான். "உன் குடும்பமும இந்தக் கிராமமும் நாச மாகவே இருக்கவேணும்னு, முத்தம்மா! இந்தச் சிசுவை நீ வளர்க்கக் கூடாது. இது பேய்க்குப் பொறந்தது. அத

ஞலே தான் இவ்வளவு ஆபத்து. இதை நீ உன் வீட்டிலே வளரச் செய்தே, ஒரே வருஷத்திலே அப்பனை முழுங்கி விடும்; பிறகு நீ, உன் மூத்தவன், இப்படி 'காவு' வாங்கிக் கொண்டே இருக்கும். அதனாலே இதை வேறெயாருக்காவது தத்து'கொடுத்துவிடு. உன்பிள்ளை என்கிற எண்ணமே கூடாது. நீயும் 'இதுவும்' ஒரே கூரையிலே இருந்தாலே ஆபத்துத்தான் ஒரு ஐந்து நிமிஷத்துக்கு மேலே, நீ இதைப் பார்த்தாக்கூட ஆபதது ஏற்படும், இது பேய்க்கிப் பொறந்தது என்று சொன்னான். முனைமாசம் என தங்கச்சி தூக்கிட்டுப் போனா. அதிலே இருந்து அங்கேயே அவன் இருநதுகிட்டான். ஆனதாலே தான் டாக்டரய்யா, நான் அவனோட போய்இருக்க முடியறதில்லே.இதை அவனுககுச் சொல்லவும் கூடாதுனனு பூசாரி சொலலியிருககிறான். மகன என்கிற பாசத்தாலோ, இந்தத தள்ளாத வயதிலே நிம்மதியா இருக்கலாமே என்ற எண்ணத்தாலேயே, நான் அவனோட போய் இருக்கிறதுன்னு, எனனாலே, ஊருக்கே நாசம வந்துடுமே, அந்தப்பாவத்தைச் சுமக்கச் சொல்றிங்களா. அவனும் குழந்தை குட்டிகளோட இப்ப சுகமா இருக்கிறுல—நானும் அவனும் ஒரே கூறையின் கீழே இருக்க ஆரம்பிச்சா. அந்தப் பேய் அவன் குழந்தை குட்டிகளையும் 'காவு' கேட்டுவிடும. அதனாலேதான், 'அக்கரை போயிருக்கிற என மகன வருகிற வரையிலே என்ன வேதனையானாலும் அனுபவிச்சு கிட்டு இருக்கிறதுன்னு ஏற்பட்டுப் போச்சு'' என்று கூறினாள். டாக்டருக்கு வநத ஆததிரத்துக்கு அளவே இல்லை. "எங்கே அந்தப் பூசாரி?' என்று கோபமாகக கேட்டார்—"அவன் செதது வருஷம் ஆறு ஆவுதே'' என்றாள் கிழவி.

என்ன செய்வான் பாதிரியப்பன், பேயாவது பூதமாவது, சாபமாவது என்று சொன்னால், கிழவியால் நமப முடியுமா! பல கலை வல்லவர்களே அந்த மயக்கத்திலிருந்து விடு

பட முடியாமல் தவிக்கிறார்கள்—இந்த கிழவிக்கு 'பகுத் தறிவு' வாதம் செய்து காட்டி பேய் பூதம் பிசாசு என்ப தெல்லாம் கட்டுக்கதை, பூசாரி ஒரு புரட்டன், அவன் சொன்னது அத்தனையும் அர்த்த மற்றது என்று ஒப்புக் கொள்ளும்படி எப்படிச் செய்ய முடியும். ஆக்ஸ் போர்டும் கேம்ப்ரிஜூம் படித்து விட்டு மனைவிமார்களை அரசமரம் சுற்றிவரச் செல்வதற்கு அமெரிக்கன் மாடல் மோட்டாரில் அனுப்பி வைக்கிறார்கள். இந்த கிழவிக்குப் 'பகுத்தறிவு' புகட்டவா முடியும்!

"பாட்டி! எவனோ ஒரு மூடன் சொன்னதை நம்பி நாச மாகித் தொலைக்காதே" என்று கூறினார்.

"மூடனா! யாரைச் சொலகிறாயப்பா பூசாரியையா! சேச்சே! அவனுக்கு, ராமாயணம், பாரதம். கந்தபுராணம் எல்லாம் மனபபாடம். ஜோதிடம் தெரியும் இந்தப் பக்கத் திலேயே, ரொம்பக் கியாதி அவனுக்கு" என்று கிழவி கூறி விட்டு. ஏன் இந்தக் காலத்திலே, இதை எல்லாம் மறுக்கிறார்கள் என்று எண்ணி வருத்தப் பட்டுக் கொண் டாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் சிலைபோலனார் டாக்டர்.

"டாக்டரய்யா! என் வினை அது, அதுக்கு யார் என்ன செய்ய முடியும். வுட்டுத்தள்ளுங்க. நீங்கள் வீண் பொழுதை ஓட்டாமபடிக்கு. ஒ நகடுதாசி எழுதிக் கொடுங்க என்று கெஞ்சினாள்.

டாக்டரின் கண்களிலே நீர் கசிந்தது-கோபமும் கொப் பளித்துக் கொண்டு வந்தது.

ஆனால் யார் மீது கோபித்துக் கொள்வது? . . . . ,

# புலிநகம்

1659! மராட்டிய மண்டலத்திலே மாவீரன் சிவாஜி வீர வெற்றிகளின் பயனாக, விடுதலை வேட்கை கொண்டவர்களின் மனதிலே கொலு வீற்றிருந்த சமயம், மணிமுடி தரித்துக் கொள்ளவில்லை ஆனால் அவன் காலடியிலே கிடந்தது மணிமுடி! ஓய்வுதான் இல்லை. பட்டாபிஷேகத்துக்கான காரியங்களைக் கவனிக்க மராட்டிய மன்னன் என்ற பட்டம் இல்லையே தவிர, நிலை அதுதான். யார் இந்த மாயாவி? மலைகளை அதிரச் செய்கிறான். மண்டலங்களை மண்டியிட வைக்கிறான், உழவர்களை வீரராக்குகிறான்! எங்கும் அவன் வெற்றி! பரத கண்டத்திலேயே புதியதோர் ஒளியானான்! பரவி வரும் இஸ்லாமிய ராஜ்யத்துக்குப் புயலானான்! இவனை இப்படியே விட்டுவைப்பதா வீரன், தீரன் இரட்சகன் அவதார புருஷன் என்றெல்லாம் புகழப்படுகிறான். புதிய அரசை சிருஷ்டிக்கிறான். சாத்பூரா மலைச் சரிவுகளிலெல்லாம் அவனுடைய போர் வீரர்கள்! குகைகளிலே கூடித் திட்டம் வகுத்து விடுகிறான். பிறகு அரண்மனைகளிலே அழுகுரல் கேட்கிறதே சரித்திரத்திலே அவன் தேடும் இந்தச் சாமான்யக் குடியானவனை இப்போது வளர விடுவது ஆபத்து எதிர் காலத்திலே அவன் புகழ் நிலைத்து விடும்! சிவாஜியின் வெற்றி நிறுத்தப்பட வேண்டும்-என்று இந்திய உபகண்டத்திலே ஆங்காங்கு ஆச்சரியமும் அச்சமும் கலந்த பேச்சு, எங்கும் அந்த அஞ்சா நெஞ்சனைப் பற்றி. அவனை அலட்சியப்படுத்த முடியாது. அவன் வளர்ச்சியைச் சாமான்யமாகவும் கருதக்கூடாது. மண்ணிலே செம்பொன் கண்டெடுக்கிறான். மயங்கிய மராட்டியத்திலே மாணிக்கங்களை உண்டாக்கி விட்டான். மாசு மருவற்றவன் என்றும் புகழப்படுகிறான் குடியில்லை. கூத்தியில்லை.

கோலாகல வாழ்வு இல்லை, வீரத்தின் சின்னமாய் விளங்குகிறான். மாற்றுக் குறையாத மராட்டியத் தங்கம் இந்த நிலையை நீடிக்கவிட்டால் இனி நமக்கு வரும் பங்கம்—என்று அரசு பீடத்தில் அமர்ந்திருந்தவர் அனைவரும் எண்ணிய காலம்அது. 1659-ம் ஆண்டு சிவாஜி ஜாகிர்தார் நிலைக்காக அல்ல சாம்ராஜ்யத்திபதியாவதற்காகவே வேலை செய்கிறான் என்பது விளங்கிவிட்டது.

5000 குதிரை வீரர்கள் 7000 காலாட்படைகள் போர் முரசு கொட்டியபடி இப்பெரும் படையைத் தலைமை தாங்கி நடத்தி வந்தான் தளபதி அப்சல்கான் குதிரைப் படை கிளப்பிய தூசுபோல சிவாஜியின் வெற்றிகள் இனி ஆகும் என்று எண்ணினான். கோபத்தோடு உறுதியோடு அசைக்க முடியாத நம்பிக்கையோடு, சென்றான், அப்சல்கான். படையின் ஆர்ப்பரிப்புக்கு இடையிலேயும், அவனுக்கு புறப்படுமுன்பு, தனக்கும் மன்னனுக்கும் நடந்த உரையாடல் கதிலே வீழ்ந்த வண்ணமேயிருந்தது வாழ்க்கையிலே முக்கியமான கட்டம் அது-அவனுக்கு மட்டுமல்ல-அவன் பணி புரிந்துவந்த அரசுக்கே.

"அப்சல்! உன் வாழ்நாளிலேயே மிக முக்கியமான செயலில் இறங்குகிறாய் இதிலே நீ வெற்றி பெறுவதைப் பொறுத்துத்தான இருக்கிறது பீஜப்பூர் மண்டலத்தின புகழ் என்று மன்னன கூறியபோது, "மன்னா! அந்த மலை எலி, இங்கு உலவுவது நமது மண்டலத்துக்கே இழிவு தருவது என்பது உணருகிறேன். இதோ புறப்படுகிறேன் சிவாஜியைச் சிறைபிடித்து வருகிறேன் வெற்றியுடன் திரும்பி வருவேன். இது உறுதி" என்று வீரமாகப பேசியதும், அப்சல்கானின நினைவிலே பதிந்து விட்டது. படையைப் பார்க்கிறான் பூரிக்கிறான் தன திறமையை எண்ணுகிறான் மகிழ்கிறான் சிவாஜியின் கண்முன் இப்படை தோன்றினலே போதும் பீஜப்பூர் மன்னன்முன் மண்டியிட அந்தமார் தட்டும்

வீரன் ஓடோடி வருவான் என்று நினைத்தான். அப்சல் கான் சாமான்யனல்ல வீரப்படைகளை நடத்திச் சென்று வெற்றி பல கண்டவன். எனவே அவன் எண்ணியது வீண் புகழ்ச்சியுமல்ல.

காடு கூடாரமாயிற்று! குதிரைகள் காறுறுகளிலே நீர் அருந்தின கடுகிச் சென்ற ஒற்றர்கள். கடும்புயல் மராட்டியத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதைச் கூறினர். கலங்காத உள்ளந்தான். ஆனாலும் காலாட் படை 7000 குதிரைப்படை 5000 படைத்தலைவன் அப்சல்கான் என்று கேள்விப்பட்டால் சிவாஜியும் சோகிக்கத்தானே வேண்டிநேரிடும் இவ்வளவு பெரிய படையை நேரடியாகத் தாக்கி வெற்றி பெற முயற்சிப்பது, வீண் வேலை எனபதை, வீரத்துடன் யூகமும் தெரிந்த சிவாஜி தெரிந்துகொள்ளாமல் இல்லை. அப்சல்கான், பிரதாப்கார் நகருக்கு வெளியே, சிவாஜி தன் சிறு படையுடன் நகருக்குள்ளே! பெரும் புயல் வெளியே ஆபத்துக்கும் தனக்கும் இடையில் இருந்தது ஒரே ஒரு காடு—அதிலே இருந்ததும் ஒரே ஒரு பாதை, அந்தப் பாதையிலே பீஜப்பூர் படைகள் நுழைந்தால், சிவாஜின் படை, தப்பிச் செல்லவும் முடியாது. அதுவரை பெற்ற வெற்றிகள் அவ்வளவையும் அப்சல்கானுக்கு காணிக்கையாக்கிவிட வேண்டியதுதானு? மராட்டியம் மண்டியிட வேண்டியதுதானு? பீஜபூர் சுல்தானிடம் பணியத்தான் வேணடுமா? வேறு மார்க்கமே இல்லையா?

1946! இன்று, இப்ருகீமுக்கு, இந்த தேச சரித்திரத்தைப் போதிக்கிருர் சுந்தரேச ஐயர்! அப்சல்கானின் பெரும்படையைக் கண்ட அஞ்சாநெஞ்சன் சிவாஜி என்ன செய்தான்? அப்சல்கானைத் தனியாக சந்திக்கவேண்டுமென்று கூறினுன். பீஜபூரான் வந்தான். அவனைத் தழுவுவது போலச் சிவாஜி நடித்துத், தன் கரத்திலே வைத்தி

ருந்த புலி நகத்தால் கிறிக்கொன்றான்!—என்று வரலாற்று ஆசிரியர் கூற. இபுருகிம் தன்னையுமரியாது "பத்மாஷ்" என்று எச துஷ்ட நிக்ரஹார்த்தம் எதையும் செய்யலாம் என்று வரலாற்று ஆசிரியர் கொஞ்சம் வைதீக போதனையும் புரிகிறார் என்ன சமாதானம் சொன்னாலும் 'இபுருகிம் "இது சதிச்செயல்! நம்பிக்கைத் துரோகம்! வஞ்சனை ஒரு வீரனின் இலட்சனமல்ல!" என்று கூறாமல் இருக்க முடியுமா? உண்மையிலேயே, மாவீரன் செய்யலாமா? சமரசம் பேச அழைத்துத தழுவி. தழுவுகிற நேரத்தில், வஞ்சகமாக கொல்வது, வீர மரபா? இல்லை! இபுருகிம் மட்டுமல்ல வெளி உலகு முழுவதும், சிவாஜி அப்சல்கானைக் கொன்றார் அக்ரமம். சதி செய்தார், தன் கீர்த்திக்கே இதனால் ஓர் பழி தேடிக்கொண்டார் என்றே கூறும். ஆனால் இபுருகீமுக்கும் தெரியாது இவ்வளவு பெரிய இலட்சிய புருஷன் ஏன் இக்தச் சதிச் செயல் புரியவேண்டும் என்று. தனிமையிலே சிந்தித்துச் சோகிக்கும் தோழர்களுக்கும் தெரியாது ஏன் சிவாஜி அங்ஙனம் செய்தார். வீர சிவாஜியை இந்த வஞ்சகம் புரியச் செய்த சூக்ஷ்ய சக்தி எது? என்ற உண்மை வரலாற்று ஆசிரியரும் அதை கூறமாட்டார். சிவாஜி துரோகம் செய்ததாக, இபுருகீம் எண்ணிக்கொண்டால் அவருக்கு என்ன நஷ்டம், அவர் இபுருகீம் இனமுமல்ல, சிவாஜி பிறந்த மராட்டியக் குடியுமல்ல, அவர் பூதேவர் பரமபரை சிவாஜியின் போக்குக்கான உண்மைக் காரணம் என்ன? அதை அறிய மீண்டும் நாம் கொஞ்சம் நேரம் அப்சல் கானின் படையுடன் போகவேண்டும். போவோம்.

வாளையும் வேலையும், கூர்பார்த்துக்கொண்டும், இன்ன விதமான நிலையிலே இவ்விதமாகக் கதிரை வீச வேண்டும் இன்ன இடத்திலே முன்னேறித தாக்க வேண்டும்' இந்த இடத்திலே, பக்கவாட்டில் தாக்க வேண்டும்' என்று போருக்கான எண்ணம் ஏற்பாடு ஆகியவைகளிலே, அப்சல்

கானின் படை ஈடுபட்டிருந்தது. கூடாரத்திலே அமர்ந்து வர இருக்கும் வெற்றியை நினைத்துக் குதூகலமாக வீற்றிருந்தான அப்சல்கான். அந்தக் காட்டிலே கோபிநாத் பண்டிட் ஜீயும், அதே இடத்தில் உலாவுகிறார். அவரிடம் வாள் இல்லை. ஆனால் மற்றக குலத்தவரைத் தம் காலடியிலே காண்பதற்கான யகத்துவத்தை மகேஸ்வரனிடம் பெற்றதாகக் கூறிக் கொள்ளும் பிரமமகுலத்தவர், கோபிநாத் அப்சல்கான சிவாஜியை முறியடிக்கப படைபலததுடன் வந்ததுடன, சமரஸம் பேசச் சிவாஜி விருமபினால், அதை முனனின்று முடிதது வைக்க அநத முப்பிரியானையும், அழைத்து வநதான். கோபிநாதரின மனதிலே எனனென்ன எணணங கள் கிளம்பின என்பதை வரலாறு எங்ஙனம் எடுததுக் காட்டும்! சரிதங்களிலே சம்பவங்களைக் கொண்டு தானே, அவற்றுக்கான சிலபல சிநதனைகளை யூகிக்க முடியும்! கோபி நாத பண்டிட் ஜீ தூது அனுப்பப்பட்டார் சிவாஜியிடம் பெரியதோர் படை தயாராகயிருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, சிவாஜியைப் பணியவைக்கக் கிளம்பினார் கோபிநாத். மகத்தான பொறுப்பென ஓர் செயல் தரப்பட்டது, என் பதை எணணும்போது கோபிநாத் பெருமை அடைந்து தான இருப்பார். ஒரு மண்டலாதிபதியின் தூதராக, மற்றோர் மாவீரனிடம செல்வது சாமான்யமான காரிய மல்ல. பண்டிட் ஜீ, புறபபட்டார். காடுகளைக் கடாக்கி விடக்கூடிய படைபலம் பெற்றிருந்த அபசல்கானின் தூத ராகக கிளமபிய அநத ஆரியனின அகம, முதலில பெருமை கொணடிருக்கும். பிறகோ சிந்தனை வேறாகித்தான் இருக்கும பரத கணடததிலே பல் வேறு இடங்களிலே நிலைபற்றிய நினைப்பு தோன்றாதிருக்குமா? கோபிநாத்தின மனககண் முன அப்போது எனனெனன காட்சிகள தோன்றியிருக்கும. அஸ்தினாபுரம் டில்லியாகி' அங்கு அவுரங்கசீப் அரியாசனம ஏறும காட்சி, ஓர் புரம்! வஙகத்திலே இஸ்லாமியரின் வல்லமையால ஆட்சி நிறுவப்பட்ட காட்சி மற்றோர் புறம்!

பீஜபூரிலே ஒரு சுல்தான் தன்னைத் தூது போகச் செய்த அப்சல்கான். துடிதுடிக்கும் படையுடன் இருக்கும் காட்சி எதிரே பிரதாப்கார் நகரம்—அங்கேயோ, மராட்டிய குலம் ஆள்கிறது ஒரு புறம் இஸ்லாமியர் மற்றொர்புறம் மராட்டியர் ஆசிரியர் ஆட்சி பீடத்திலே எங்கும தென்படவில்லை. பெருமையுடன் அந்த பூபாகத்தை பாரத் வருஷம் பரத கண்டம ஆரியவர்த்தம் என்று பேசிக் கொள்ளும ஆரியர் அரசபீடத்திலே இல்லை தூதுபோகும் வேலைதான கிடைத்தது கோபிநாத் பண்டிட்ஜின், மனக்கண் இவை போனற காட்சிகளைக் காணுதிருக்க முடியாது!

அப்சல்கான் அனுப்பிவைத்த கோபிநாத் பண்டிட்ஜி சில சகாக்களும் பணியாட்களும் புடைசூழ, நகருக்குள் நுழைநதார். "பணிந்துவிடு சிவாஜி! இல்லையேல்! அழிவு இநகருக்குள் நுழையும் நீ அஞ்சா நெஞ்சனுக இருக்கலாம் ஆனல், அப்சலகானிடம் இருக்கும் படை பிரமாண்டமானது" என்று கூற, சிவாஜி, கோபிநாத் பண்டிட்ஜீயை மரியாதையாக வரவேற்ருன், உபசாரம் பல புரிந்தான். அவரும் உடன் வந்தோருமா தங்கியிருக்க, இடவசதிகள் ஏற்பாடு செய்து தநதான். ஒரு பலம் பொருந்திய துரைத்தனத்தின் தூதுவராக வந்துள்ள பண்டிட்ஜியை மிக்க கௌரவமாக நடத்த வேண்டுவது முறைதானே முறை தெரியாதவரா' வீர சிவாஜி முறைமட்டுமலல கொஞ்சம் யூகமும் தெரிந்தவர். கோபிநாத் பண்டிட்ஜி பிரம்ம குலததவர் என்பது தெரிந்ததும் சிவாஜிக்கு வர இருக்கும் ஆபததின்றும் தப்ப ஒரு வழி கிடைக்கக் கூடும என்ற நம்பிக்கை பிறந்தது. கோபிநாதருக்குச் செய்தமகத்தான உபசாரத்தின் உட்பொருள் அதுதான். அவருடன் வந்தவர்களுக்குத் தரப்பட்ட விடுதிகளினின்றும் கொஞ்சம் தொலைவான இடத்திலே பணடிட்ஜிக்கு தங்கும இடம் அமைக்கப் பட்டது. நள்ளிரவில் சிவாஜி அந்தத தனியிடம் சென்ருன்.

கோபிநாத் பண்டிட்ஜியிடம் தனியாகப் பேச தூது கூற வந்தவரை இலகுவில் தன்பக்கம் இழுத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் மராட்டிய மாவீரரின் நம்பிக்கை வீண் போகவில்லை. மறையவர் மலர்ந்த முகத்துடனேயே வரவேற்றார் சிவாஜியை.

"மாமுனியே, மராட்டிய மண்டலத்துக்கு வந்துள்ள ஆபத்தை நினைக்கும்போது..."

"மனக்கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் மாவீரனே பணிவதன்றி வேறு மார்க்கம் இல்லை."

"பணிவது பற்றியல்ல பூதேவா நான் சோகிப்பது என் மனோபீஷ்டம் சங்கலபம் பாழாகுமே."

"படைபலம் அவனிடம் அதிகம்' எதிர்த்துப் பயன் இல்லை. தோல்வி நிச்சயம் சம்பவிக்கும். அழிவை அணைத்துக்கொள்வாருண்டோ?"

"மறையரே என் சங்கல்பம் இந்த பாரதவர்ஷத்திலே, நமது ஜென்மபூமியில், புண்யபூமியல். இந்து சாம்ராஜ்யம் சிருஷ்டிக்க வேண்டும் என்பதுதான். என் பொருட்டு அல்ல பிராமணோத்தமர்களின் பொருட்டே, நான் இந்த பாடு படுகிறேன். என் இலட்சியம் தங்களுக்கு தெரிந்திருக்கும். பசு, பிராமணர் இவற்றின் இரட்சகன் சிவாஜி என்பதை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே என் நோக்கம். இந்த ராஜ்யம் ஏற்பட்டால்தான் பூர்வபெருமை நிலைக்கும் பண்டைச் சிறப்பு மீண்டும் தோன்றும் ஆரியவர்த்தத்திலே, வேதாச்சாரமும் குலதர்மமும் ஜொலிக்கும் ஸ்வாமி! சித்தம் குழம்பியிருக்கும் நான் தங்களை யாசிக்கிறேன். என் சங்கல்பம் ஈடேறவழி செய்யுங்கள். சனாதன தர்மம் தழைக்க உபாயம் கூறுங்கள். இந்த பீஜப்பூர் படையினால் அழித்துவிடலாமோ, நான் பாடுபட்டு வளர்த்துவரும பால்யன்! பூஜிதரே! ஒரு வழி காட்டும்"

"நானா? வழி காட்டுவதா? சிவாஜி நான் பீஜப்பூர் சுல்தானின் தூதுவன்"

"இல்லை சுவாமி தாங்கள் பார்த்வர்ஷத்தின் பிரதி நிதி ஆரியாவர்த்தத்தை இரட்சிக்க வேண்டிய ஆரியசிரேஷ்டர் தங்களை அப்சல்கான் அனுப்பியிருந்தாலும் சரி; பீஜப்பூர் சுல்தான் அனுப்பியிருந்தாலும் சரி, நான் தங்களை ஆண்டவன் அனுப்பிவைத்த தூதுவர் என்றே கொள்கிறேன். ஆரிய, ஆரியவர்த்தத்துக்கு ஆபத்து நேரிடு வதைத தடுக்கப் பிரம்ம குலத்தவராகிய உமக்கு உரிமை யுண்டு. உமது கடமையும் அதுதான். நான் ஆரிய சேவா சைன்யத்தை நடத்துபவன். கட்டளை பிறப்பித்துவிடும். ஆரியாவர்த்தத்தை அன்னியரிடம் தந்துவிடவா? அப்சல் கானின் அடிபணியவா? ஆரிய நான் அடிபணிவது என்றால் என்ன அர்த்தம்? ஆரிய வர்த்தம் அழிந்தது என்று பொருள்."

கோபிநாத் பண்டிட்ஜி வந்ததோ,சிவாஜியைப் பணிய வைக்க· சிவாஜியோ, மேலே. திட்டப்பட்ட கருத்துக்களைக் கொட்டினான் கோபிநாத் முன்பு. கோபிநாத் கூறிவிட்டிருக் கலாம், "சிவாஜி துரோகம் செய்யமுடியாது. நம்பிக்கை மோசம் மகா பாவம் நான் பீஜப்பூர் சுல்தானின் உப்பைத் தின்பவன் அவனுக்கு ஊறு தேட மாட்டேன். அது கயவர் செய்யும் காரியம். தர்ம சாஸ்திரம் இதை ஏற்காது என்று ஆனால் கோபிநாத் அது போல கூறினாரா? இல்லைதுரோகம் செய்யக்கூடாது என்ற எண்ணம் இல்லை. ஆரியவர்த்தம் ஆரிய சிரேஷ்டர் சனாதனம் எனும் சொற்களின் சுவையை ரசித்தார் பீஜப்பூர் சுல்தானைக் காட்டிக்கொடுக்க இசைந் தார் வந்தது தூதுவனாக· ஒப்புக்கொண்டதோ துரோகியா வதற்கு· எவ்வளவு நேரம் கோபிநாத் பண்டிட்ஜியின் மனதிலே போராட்டம் இருந்ததோ நாம் அறியோம் துரோகி என்று உலகு எதிர்காலத்திலேனும் தூற்றுமோ

என்று துளியாவது அச்சம் பிறந்ததோ அறியோம். பக்தனின் தூபத்தைப் பெற்றுப் பரவசமடைந்த பண்டிட்ஜி, பழி, பாவம் எதையும் கருதாமல், எந்த பீஜப்பூர் சமஸ்தானத்தால் வளர்க்கப்பட்டாரோ அதே அரசுக்குத் 'துரோகியாக' இசைந்தார். கோபிநாதர், சாமன்யரா? பண்டிஜி! வேதபுராண இதிகாசம் தெரிந்தவர்! அதாவது, நயவஞ்சகம், அடுத்துக் கெடுத்தல், அணைத்து அழித்தல், கொஞ்சி நஞ்சு தருவது போன்ற முறைகளை ஏராளமாகக்கூறும ஏடுகளை நனகு அறிந்தவர், பாரதத்திலே, திருதராஷ்டிரன், எதிரியை அணைத்து அழிப்பதுபற்றிப் படித்திருக்கிறார்! சூரியனையே சக்ராயுதத்தால் மறைத்துப்பொழுது சாய்ந்ததாகக் காட்டி எதிரியைக் கொல்ல அருச்சுனனுக்கு உதவிசெய்த கண்ணன் காட்டும வழியை அறிந்தனர் கோபிநாத்! பாரதம், எதிரியை அழிக்க, "தாமாதர்மம" பார்க்க வேண்டிய அவசியமில்லை என்ற ஆரியமார்க்கத்தை எடுத்துரைக்க, ா கோபிநாதருக்கு மட்டுமல்ல, சிவாஜிக்கும தெரியும பாரத—இராயாயணக் கதை பூஜைக்குரிய இராமன் மரத்தின் பின புறமிருந்து அம்பு எய்து வாலியைக் கொன்ற கதையை பகதி சிரத்தையோடு பாராயணம் செய்ததும், அதைக் கேட்டு ஆனந்தித்ததும். வீண் போகுமா? இப்படிப்பட்ட சமயத்திலே, அந்த இதிகாசங்களிலே தெரிந்து கொண்ட 'முறைகள்' பயன்படவில்லையானல், அவைகளைப் படித்துத்தான் பயன் என்ன! கோபிநாத் பண்டிட் சிவாஜிக்கு அப்சல்கானின் படையை முறியடிகக; இன்ன யாகம செய். அதனல் இன்ன அஸ்திரம் கிடைக்கும் என்று யோசனை கூறினரா? இல்லை! தெய்வத்தை உபாசனை செய் இந்த மந்திரத்தை ஜெபித்துவிட்டுப் போருக்குக் கிளமபு, என்று உபதேசம செய்தாரா? அவர் 'குரு'வாக அமரவில்லை' பீஜப்பூர் குடிகெடுக்கும் துரோகியானர். அப்சல்கானுடன போர் வேணடாம—பணிதலாகச் சொல்லி

யனுப்பு பாவனைக்கு—அப்சல்கானிடம் நேரடியாக பணி யத் தீர்யானித்திருப்பதாக செய்தி அனுப்பு—தனியாக அப்சல்கான் இங்கே விஜயம் செய்யட்டும், நான் அவரிடம் சரண் புகுந்து விடுகிறேன்—சமர் வேண்டாம் என்று அப்சல்கானிடம் தூது அனுப்பு என்று யோசனை கூறினார் பண்டிட் கோபிநாத்—பண்டிட்?—இல்லை... பாதகன்!

"அப்சல்கான் வருவானா?"

"அனுப்பி வைக்கிறேன், அதாவது, அவன் இங்கே தனியாக வரும்படி நான் செய்கிறேன்"

"வந்த பிறகு......?"

"வந்த பிறகு! மராட்டியத்தை உன் மண்டலத்தை உன் எதிர்காலத்தைக் கருக்கக்கூடிய எதிரி, துணையின்றி தனியாக வருகிறான் என்னைச் சந்திக்க! வந்த பிறகு...என்று என்னைக் கேட்கியோ, வகை கெட்ட..."

"அறிந்தேன் ஆரிய! ஆனால், அப்சல் ஆயுதபாணியாகத்தானே வருவான்?"

"பைத்தியக்கார! அப்சல்கான, அஞ்சி அடிபணியக் காத்துக் கொண்டிருக்கும் சிவாஜிக்குத் தஞ்சமளிக்க வன்றோ இங்கே வருவான்—நிராயுதபாணியாகவே வருவான்—அவ்விதம ஏற்பாடு நடக்கும்."

"பண்டிட்ஜி! தங்கள் பாதாரவிந்தம்"

கோபிநாத் பண்டிட்டின் சதியாலோசனையே சிவாஜியைத் தனியாகக் காண, அப்சல்கான் வருவது

என்ற ஏற்பாட்டை உருவாக்கிற்று! வீர சிவாஜிக்கு வாள் ஏந்தத் தெரிந்த அளவுக்கு வஞ்சனை வீசத் தெரிந்திருக்க முடியாது. வேதிய குலத்தவராம் கோபி நாத் பண்டிதர், அந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டார், பரம்பரைப் பழக்கத்தின்படி! சிவாஜி மகத்தானதோர் 'இராஜ தந்திர' வெற்றி பெற்றதாக சந்தோஷித்தான் பண்டிட் கோபிநாத், மராட்டியத்தை ஆரிய சேவா பீடமாக்கி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். அப்சல் கானே திறமை மிகுந்த தூதுவர், திரும்பி வருவார், சீறிப்போரிட்ட சிவாஜியின் சரணாகதிச் செய்தியைத் தூக்கிக்கொண்டு, என்று எண்ணிச் சாய்ந்திருந்தான். கோபிநாத் பண்டிட்ஜி வந்து சேர்ந்தார்—அப்சல் கானின் கொலைக்கான ஏற்பாடு செய்து வைத்து விட்டு! அப்சல் படை அறிவான், போர் அறிவான், பாதகம் சதி, பசப்பு இவைகளைத் தாங்கி நடமாடும் மனித உருவங்கள் தன் பக்கத்தில் இருப்பதை எங்ஙனம் அறிவான்!

"சலாம்! பண்டிட்ஜி" என்று சந்தோஷமாக, கோபி நாத்தை வரவேற்றான். அன்றுமட்டுந்தானா! 1946-ல் கூடத்தான்! 'வாங்க ஸ்வாமி' என்று கோபிநாதர்களை வரவேற்கிறார்கள்!

'சரண் அடையச் சம்மதித்து விட்டான்!'

பஹுத் அச்சா! பண்டிட ஜீ! அவன் மகாமுரடன் என் பார்களே, எப்படிப் பணியச் சம்மதித்தான்?'

"முரடனாக இருக்கட்டுமே, சைன்யாதிபதி! அவன் என்ன குருடனா, இந்தப் பிரமாண்டமான படை நம்மிடம் இருப்பதை அறியாதிருக்க!'

"ஒரு விதத்தில் என் வெற்றிதான்."

"ஒருவிதத்தில் மட்டுமா, சகல விதத்திலும் கோபி நாத்தின் வெற்றிதான் அது. போரிடப் புறப்பட்ட அப்சல் போரிடாமலேயே மாவீரனை மண்டியிடச்செய்து விட்ட மகிழ்ச்சிப் பெருக்கால், கேளிக்கையாகத்தானே இருந்திருப்பான். ஏன் இராது? எந்தப் பக்கமும் எந்த வீரனுடைய வெற்றி முரசு கேட்டு வந்ததோ, எந்த வீரனின் வெற்றிக் கொடி மலை உச்சிகளிலெல்லாம் மகோன்னதமாகப் பறக்க விடப்பட்டதோ, அந்த வீரன் மண்டியிடச் சம்மதிக்கிறான் என்றால், மகிழ்ச்சி பிறக்கா திருக்குமோ, அப்சல்கானுக்கு.

அந்த மகிழ்ச்சி பன்மடங்கு அதிகமாயிற்று, சிவாஜி யால் அனுப்பப்பட்ட தூதன், அப்சலிடம் சரணாகதியை உறுதிப்படுத்த வந்தபோது. கோபிநாத் பண்டிட்ஜி அப்சல்கானால், அனுப்பப்பட்ட தூதன்! சிவாஜி அனுப் பிய தூதனும், ஓர் பிராமணனே! பெயர் கிருஷ்ணாஜி பாஸ்கர்.

'சிவாஜி, சமர் செய்ய விரும்பவில்லை. பீஜப்பூர் ஆட் சிக்கு அடங்கி நடக்க ஒப்புக்கொள்கிறார். பீஜப்பூர் சுல்தானின், அதிகாரத்துக்குக் கட்டுப்பட இசைகிறார் சரண் அடைய விரும்புகிறார். வீராதி வீரனே! எங்கள் சிவாஜியின் இந்த வேண்டுகோளைத் தயை கூர்ந்து ஏற்று அருள வேண்டுகிறேன்.' என்று பாஸ்கரன் கூற அது கேட்டுப் பரமானந்தம் அடைந்த அப்சல் கான், 'நமது படையுடன், பிரதாப்கார் நகருக்குள் பவனி வருவோம், அங்கு சிவாஜி பணியட்டும், பீஜப் பூர் ஆட்சியின் கீழ் வாழச் சம்மதிக்கும் சிவாஜிக்கும் நாம், சுல்தானின் பிரதிநிதி என்ற முறையிலே, பேட்டி

தருகிறோம்' என்று கூற, பாஸ்கரன் பயந்து தழதழத்த குரலில், 'ஒரு விண்ணப்பம்! சிவாஜி, சரணாகதி சம்பந்தமாகப் பேசுவதற்காகத் தங்களைத் தனியே சந்திக்க விரும்புகிறார், இங்கேயே வர எண்ணினார்' என்று வலைவீசும் பேச்சைத் துவக்கினார் சதிக்கூட்டத் தலைவன் கோபிநாத், 'இங்கே இருக்கும் பெரும்படை முன்னாலா, அஞ்சுகிறான் உங்கள் அசகாயசூரன் பிராமணரே! ஏன் மறைக்கிறீர் வெட்கமோ!' என்று கூறினார். அப்சல்கானின் ஆனந்தம் அளவு கடந்ததாகி விட்டது, 'கோபிநாத் பண்டிட்ஜி! அவ்வளவு பயங்கொள்ளியா சிவாஜி' என்று கேட்டான் அப்சல்.

அந்தக் கேள்வியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோபிநாத், முகஸ்துதியை வாரி வாரி வீசினான் அப்சல்கானின் யூகம் அறியுமளவு.

'அதிலென்ன ஆச்சரியம், சேனாதிபதி அவன், உமது ஜெயங்களைப் பற்றிக் கேள்விப்படாமலா இருந்திருப்பான் ஏன் தான் அதுவரையில் நாதியற்ற நகரங்களையும் நெஞ்சில் உறுதியற்ற கும்பலையும் தாக்கி வெற்றிகண்டேன் என்று வீறுப்பு பேசித்திரிந்தான் இன்று மகத்தானதோர் படையை நடத்தும் தீர புருஷனாகிய அப்சல்கான். களத்திலே சிம்மம்போல் நிற்கும தலைவன் வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், நடு நடுங்கிப்போய்விட்டான். பீஜப்பூர் சமஸ்தானத்தின் பெருமையை அறியானா? தன் பக்கம் பீஜபூரின் திருஷ்டி படாதிருந்தவரையிலே தப்பிப் பிழைத்தான். இப்போது?'

இந்த முகஸ்துதி, அடியோடு அப்சலைக் கவிழ்த்து விட்டது.

'சரி! பயம் வேண்டாம் என்று சொல் நாளை நாம் தனியாக ஆயுதமின்றி வருகிறோம். சிவாஜியின் சரணாகதிக்கான சம்மதத்தைப் பெற' என்று கிருஷ்ணாஜி பாஸ்கருக்குக் கூறி அனுப்பிவிட்டு, 'இப்படிப்பட்ட பயங்காளியை நான் கண்டதே இல்லையே!' என்று எண்ணி எண்ணிப் பூரித்தான்.

சதியாலோசனைத் திட்டத்தின்படியே சந்திப்பு நிகழ்ந்தது. போர் வீரர்களின் துணையின்றி, ஆயுதமுமின்றி சிவாஜியை சந்திக்க அப்சல்கானை அழைத்து வந்தான் கோபிநாத், சிவாஜி நேசத்தையும், சமரசத்தையும் காட்டுவது போல, அப்சல்கானைத் தழுவினான். 'ஐயோ' என்று அலறினான் அப்சல்கான் அவன் அடிவயிற்றிலே புகுந்தது சிவாஜியின் கரத்திலே, மறைத்து வைக்கப்பட்டிருந்த புலிநகம்! சரணாகதியை ஏற்றுக் கொள்ள வந்த அப்சல்கான், வஞ்சகமாக வதைக்கப் பட்டான். இதற்குள் அப்சல்கானின் படை புகக்கூடிய பாதை அடைக்கப்பட்டுவிட்டது சிவாஜியின் படை இனிப்போர் இல்லை. என்று எண்ணி, ஆயுத்தம் ஏதும் செய்யாது, ஆனந்தத்திலே மூழ்கியிருந்த அப்சல்கானின் படைமீது பாய்ந்தது அங்கேயும் படுகொலை தான் கோபிநாத் பண்டிட்ஜீயுமகிருஷ்ணாஜீ பாஸ்கரும்சிவாஜியை வஞ்சனையில் ஈடுபடச் செய்து சதிச்செயல் புரியவைத்து மறைக்க முடியாத பழியை மரவீர் தலைவனுக்கு வாங்கித் தந்தனர் அப்சல்கானின் உயிரையும் போக்கினர் அப்சல்கானைச் சிவாஜி அக்ரமமாகக்கொன்று வரலாற்றுச்சம்பவத்தையே மக்கள் அறிவர் வரலாற்று ஆசிரியர் கூறுவர். ஆனால் கோபிநாத் பண்டிட் கிருஷ்ணாஜி பாஸ்கர் என்பவர்களைப் பற்றிக் கூறார். சரித்திரம் என்றால் மன்னர்கள் கதைதானே என்று மக்களும் எண்ணிக்கொண்டு கோபிநாத் பாஸ்கர் போன்றவர்களைக் கண்டுபிடிக்க

முயல்வதில்லை ஆனால் இந்த உபகண்டத்து வரலாற்றிலே கோல் கொண்டவர்களைப் பற்றி அறிந்து கொள்வதைவிட கோபிநாத் களைப்பற்றித் தெரிந்துகொண்டால்தான் உட்பொருள் விளங்கும் உண்மை துலங்கும் அப்ரல் கானின் மரணம், புலிநகத்தால் என்று கூறுவதைவிட பூசுரனின் புன்னகையால் என்று கூறுவதே பொருந்தும்.

# ஏழை பங்காளர்

"கொடுமை! கொடுமை!"

ஒரு பெருமூச்சு.

'அக்ரமம்! அநீதி! அடுக்காது.'
கண்ணீர் புரள்கிறது.

'எனக்கா இந்தக்கதி?'

ஏக்கமான பார்வை, கடலைக் கடந்து சென்று பாரிஸ் பட்டணத்திலே மாளிகை, மனைவி, மக்கள் உற்றார் உறவினர் மீது பாய்கிறது.

'ஒரு குற்றமும் செய்யாத எனக்கு இந்தக் கடுந் தண்டனையா? நீதிக்காகப் போராடுபவர்கள் இல்லையா? நிரபராதியைக் காப்பாற்ற யாரும் இல்லையா? பொய்யை மெய்யென்றாக்கும் வஞ்சகரை வீழ்த்த ஒரு வீரன் இல்லையா? உண்மைக்காகப் பரிந்து பேச, யாரும் இல்லையா? ஏழை பங்காளர் உண்டோ இல்லையோ! ஒரு பிழையும் செய்தறியாத என்னை இந்தத் தீவிலே தள்ளிய தீயர்களின் போக்கை, எதிர்க்கும் துணிவுகொண்ட ஒரு தீரன் இல்லையா எல்லோருமா மண்டியிட்டு விட்டனர் ஒருவர் இல்லையா உண்மை உரைக்க! என் பொருட்டுப் போரிட! நீதியை நிலைநாட்ட!'

சோர்வுமேலிட்டுச் சாய்கிறான்! அவனுடைய உடை சுக்குநூறாகிக் கிடக்கிறது. ஒரு காலத்தில் ராணுவர் உடை தரித்துக் கம்பீரமாகப் பாரிசில் உலவியவன் ஆயுள்

தண்டனை பெற்று, (அந்தமான் தீவு போன்ற டெவில்ஸ்) தீவிலே உழல்கிறான் அவன் செய்த குற்றம் என்ன? அதைத்தான் அவன், தண்டிக்கப்பட்ட அன்றும் கேட்டான் தீவிலே ஒவ்வொரு நாளும், கேட்டபடி இருந்தான்; பதில் என்ன? காற்று ஏதோ பேசிற்று; புரியாத மொழி! அலை ஒலித்தது; ஒலிதான், பொருள் இல்லை! அவனுடைய பெரு மூச்சு ஒன்று தான் புரியக்கூடிய மொழியாக இருந்தது. அநியாயமாகத் தண்டிக்கப்பட்டான். வஞ்சகரின் வலையில் சிக்கினான். வதைகிறான் அக்ரமக்காரரின் இலக்காகி இம் சைப்படுகிறான் குற்றமற்றவன், கொடுமை செய்கின்றனர் என்று தெரிவிக்கிறது பெருமூச்சு. அது, தீவில்! பாரிஸ் நெடுந்தூரத்தில் இருக்கிறது, பாரிஸ்

தீவிலே, திக்கற்ற நிலையிலே, தீயர்களின் சூழ்ச்சி யினால் தண்டனை பெற்ற 'டிரைபஸ்' 'ஒரு குற்றமும் நான் செய்யவில்லையே' என்று குமுறிக்கொண்டிருந்தான். அலைகடலிடையே உள்ள அந்தத் தீவிலே அவன் ஆறு தல் கூறுவாரின்றி அவதிப்பட்டான். கண்ணெதிரே கடல கருத்திலேயும் கடல்தான். அலை அலையாக எண்ணங்கள். தாய்நாட்டைத் துரோகம் செய்து அரசாங்கத்தாரின் இராணுவ இரகசியத்தை வெளியிட்டான் என்று 1895-ல் குற்றம் சாட்டபபட்டு, ஆயுட் தண்டனை தரப்பட்டவன் டிரைபஸ். அவன் மீது சுமத்தப்பட்டது அபாண்டம் என்று நிரூபிக்கமுடியவில்லை. உண்மைக் குற்றவாளிகள் டிரைபசைப் பலியிட்டுச் சட்டத்தைச் சரிப்படுத்தி விட்டுத் தங்களைக் காப்பாற்றிக்கொண்டனர் அவன் தீவிலே திகைக்கிறான்; தீயர்கள் தேசத் தலைவர்களெனத் திகழ் கின்றனர். டிரைபசுக்காக வாதிட யாரும் இல்லை! அவன் மனைவி ஓயாது அழுதாள். நண்பர்கள் கதறினர். ஆனால் அவன் பொருட்டுப் போரிட ஒரு மாவீரனும் தோன்ற வில்லை. அவனுக்காகப் போரிட வேண்டுமென்

ருல் பலம் பொருந்திய பிரஞ்சுசர்காருடன் போர் என்று பொருள் வஞ்சனையில் கைதேர்ந்தவர்களுடன் புன்னகைப் புலிகளுடன் நயவஞ்சக நரிகளுடன் போர் தொடுக்கவேண்டும் இணையில்லாத வீரம், ஏழைக்காக எதையும் சகித்துக் கொள்ளும் துணிவு நீள்வையமே எதிர்த்தாலும அஞ்சாமல் நீதிக்காகப் போரிடும் பண்பு இவை வேண்டும் போக போக்கியத்தில் புரண்டு கொண்டிருந்தவர்கள் ஏன் தமது சிறு விரலையும் தூக்கவில்லை! அவர்களின் அலுவல் அதுவா! மது நிறைந்த கோப்பை மதுரமொழி வழியும் அதரம் மயக்கமூட்டும் கண்கள், இவைகளில் மனதைப் பறிகொடுத்தவர்களுக்கு ஒரு டிரைபஸ அக்ரமமாகத் தண்டிக்கப்பட்டது பற்றி என்ன கவலை!

பாவம்! டிரைபஸ், எவ்வளதோக ண்ணியமாக வாழ்ந்து வந்தவன் கம்பீர புருஷன் அவன் கதி கடைசியில் ஆயுட்தண்டனை!'

என்ன செய்யலாம சட்டப்படி உயர்தர நீதி மன்றத்தார் விசாரித்தல்லவா தண்டித்தனர் அரசாங்கத்தின் இராணுவ இரகசியத்தையல்லவா டிரைடஸ் வெளிபபடுத்தி விட்டான் சாதாரண குற்றமல்லவே!

செய்திருப்பாரு? டிரைபஸ் உண்மையில் குற்றவாளி தானு?

இல்லாமலா தண்டித்தார்கள் தக்க ருஜு இருந்ததால் தான் நீதிபதிகள் தணடித்தனர்

இவ்வளவு தான் டிரைபசைப் பற்றிய பேச்சு மாளிகை கொலுமண்டபம் நிர்வாக நிலையங்களில் எவ்வளவாவது பேசப்பட்டதற்குக் காரணம் ;தீவாந்திர சிட்சை பெறுவ

தற்கு முன்பு டிரைபஸ் பரிஸ் பட்டணத்ல் அதிகாரியாய் அந்தஸ்துடன் வாழ்ந்தால்தான் நாதியற்றவனுகி தீவிலே நலிகிருன் டிரைபஸ் பாரிஸ் நகைமுகம் காட்டும நங்லகையாகவே திகழ்ந்தது. டிரைபசின் கண்ணீர்கடல் நீருடன் நான் குற்றமற்றவன்! டிரைபஸ் கூறுகிருன் தீவில் ஆதாரம் எங்கே? நீ நிரபராதி என்பதற்கு ருஜூ எங்கே? என்று சட்டம் கேட்கிறது டிரைபஸ் தன் இருதயத்தின் தூய்மையை எடுத்துக்காட்டுகிருன். சட்டம் சிரித்துவிட்டு வேறு வேலையைக்கவனிக்கிறது நான் குற்றமற்றவன் என்று டிரைபஸ் கூறிக்கொண்டிருந்தான் தீவில் நாட்கள் மாதங்களாயின ஆண்டுகள் உருளத் தொடங்கின. டிரைபஸ் கந்தலாடையில் இருக்கிருன். கண்கள் குளமாகிப் பிறகு வறண்டுபோயின;கைகால்கள் எலும்புருவாயின;டிரைபஸ், நடைப் பிணமாஞன், ஈனக் குரலில் அப்போதும் கேட்டவண்ணம் இருந்தான், 'நான் செய்த குற்றம் என்ன?' என்று.

டிரைபஸ் செய்த குற்றம் என்ன? அவன் நன்ருகப் படித்தவன்—குற்றம்.

சலியாத உழைப்பாளி—குற்றம்.

உண்மையான சாட்சியங்கள் அவனுக்கெதிராகக் கிடைக்கவில்லை—குற்றம்.

அவன் கலங்காதவன்—குற்றம்.

பாரிஸ் பட்டணத்திலே, ஒரு மாவீரன் கிளம்பிஞன், டிரைபஸ் செய்த குற்றங்களைக் கூற! இராணுவ இரகசியத்தை வெளியிட்டான் என்று குற்றம் சாட்டிஞர்களே, அது அல்ல அவன் செய்த குற்றம்; படித்தான், உழைத்தான், வஞ்சகருக்கு எதிராக வழக்கு மன்றத்திலே வலிவு

தேடிக்கொள்ள முடியவில்லை; அதுதான் குற்றம் என்று இடித்துக் கூறினன் அந்த இணையில்லாத வீரன்.

மான் குற்றம் செய்யலாமா, புலியார் தண்டிக்கிறார்! ஏன் மான் அழகான கண்களைக் காட்டிற்று? புள்ளிமான் துள்ளி விளையாடுவதா! கள்ளங்கபடமற்று ஓடுவதா! சருகு உதிரும் சத்தம் கேட்டாலும் மருண்டு ஓடுவது ஒரு குற்ற மல்லவா! சாதுவாக இருப்பது மற்றோர் குற்றம்! பதுங்கிப் பாய்வது, பல்லால் கடிப்பது, நகத்தால்கிழிப்பது, இரத்தம் குடிப்பது, உறுமுவது போன்ற ஒரு நற்பண்பு இல்லை! இவைகளைப் பெருதிருத்தல் குற்றமல்லவா? புலியார், எத்தனை குற்றங்களைத்தான் பொறுப்பார்! ஆகவே தான் குற்றம் செய்த மானைத் தண்டித்தார்!

டிரைபஸ் செய்த குற்றமும இவ்விதமானதே!

இதனை, இறுமாப்பாளருக்கே இடித்துக்கூற, ஒருவர் தான் முன்வந்தார். ஒரு பலனுங் கருதாது முன்வந்தார். தன் தலைபோகுமே என்ற பயமின்றி முன்வந்தார். எதிர்ப் புச்சக்தியின் தன்மையும் அளவையும் பொருட்படுத்தாது முன்வந்தார் நீதியை நிலைநாட்ட — கைவிடப்பட்டவனைக் காப்பாற்ற ஒரே ஒருவர்தான் வரமுடியும், ஒப்பற்ற உள்ளப் பண்புடையோர் மந்தையாக இரார். ஒரே ஒருவர்தான்; அவர்தான் ஏழைப்பங்காளர் எமிலிஜோலா! பிரான்சு நாடு மௌனம் சாதித்தபோது ஜோலா உண்மையை உரைத்தார், 'டிரைபஸ் குற்றமற்றவன்' என்று.

எமிலிஜோலாவுக்குத் தவிர, வேறு யாருக்கும் அந்த உறுதியான உள்ளம் இருக்க முடியாது. அநீதி பெருநெருப் பெனக் கொழுந்து விட்டெறியும்போது, அதனை அணைக்கத் துணிவது அனைவருக்கும் சாத்தியமாகக் கூடிய செயலல்ல! ஜோலாவால் முடியும்! ஜோலா அப்படிப்பட்ட ஆற்றல்

படைத்தவன், அவனுடைய பேனா 'நானா'வுக்காகப் போராடிற்று. நானா 'கேவலம்' ஒரு வழுக்கிவிழுந்த வனிதை தான். அவளுக்காகப் போராடிய ஜோலாவால்தான் டிரைபஸ் விஷயமாகவும் போராட முடியும்; போராடினார் —வாழ்க்கை முழுவதுமே வறியோருக்காகவே போராடிய வீரர் ஜோலா. தனக்காகப் போராடும்படி டிரைபஸ் ஜோலாவைக் கேட்டுக் கொள்ளவில்லை. அவன் அநீதிக்கார ரால் அவதிக்கு ஆளாக்கப்பட்டான் என்று அறிந்தார். ஆவேசம் பெற்றார், ஆற்றல் அவ்வளவையும் செலவிட்டார், 'நீதி' வெளிவந்தது.

'நானா' சம்பவமும் அப்படிப்பட்டதே,

ஜோலா, அவரது நண்பனுடன் மிகமிகச் சாமான்யர்கள் மட்டுமே செல்லும் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டுகொண்டிருந்தார்! ஒருநாள் திடீரென்று கூக்குரல் கேட்டது. பெண்களின் அலறலொலி நாலாபக்கங்களிலிருந்தும் கிளம்பியது. ஜோலாவும் நண்பனும் ஜன்னலோரத்தில் சென்ற பொழுது ஏராளமான பெண்கள், விரட்டுகிற போலீசிடமிருந்து தப்பி அங்குமிங்கும் சிதறிக் கொண்டிருந்தனர். விபசார விடுதிகளில் போலீசார் நுழைந்து விரட்டினர். விபசாரத்தையல்ல, விபசாரிகளை!

மேல்மூச்சு வாங்க ஒரு இளமங்கை அந்தக் கடைக்குள் நுழைந்து ஒரு தூணுக்குப்பின்னால் மறைந்துகொண்டாள். பயத்தாலும் திகிலாலும் அலைக்கப்பட்ட அந்த மங்கையை ஜோலா தன்னருகில் அழைத்தான். அச்சத்தோடு அவள் மெதுவாக அவன் பக்கத்திற்கு வந்தாள்; எனினும் போலீஸ்காரன் கடைக்குள் நுழைந்ததும் தப்பியோட அவள் முயன்றாள். ஜோலா அவள் பக்கம் சென்று, அவள் தன்னைச் சேர்ந்த நண்பர் எனக் கூறிப்

போலீஸ்காரனை அனுப்பி விட்டான். பிறகு மூவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர் வறுமை எவ்வளவு வாட்டிய போதிலும், வாடாத அழகின் சாயல் அவள் முகத்தில் இருந்தது. அவளுடைய இழிதொழில் அவளை முற்றும் சிதைக்கவில்லை. ஜோலாவின் நண்பன் ஒரு ஓவியக்காரன். அவன் அவளுடைய உருவத்தை அங்கேயே தீட்ட ஆரம்பித்தான். ஜோலா அவளுடைய வரலாற்றைக் கேட்க ஆவலுள்ளவனுயிருந்தான். மிக வணக்கத்துடன் "உங்கள் பெயரென்ன அம்மா" எனக் கேட்டான் ஜோலா. பெயரா? அவள் வாழ்ந்த ஒவ்வொரு ஊரிலும் அவளுக்கு ஒவ்வொரு பெயர் இருந்தது.- பெயர்களைக் கூறிவிட்டு, "ஏன் கேட்கிறீர்கள்" எனக் கேட்டாள். 'நானும் உங்களைப் போல ஒருவன்தான் அம்மா' எனக் கூறிவிட்டு, பணியாளனைக் கூப்பிட்டு அவளுக்குச் சிற்றுண்டியளிக்கச் சொன்னுன்.

அவள் தூரத்துக் கிராமத்தைச் சேர்ந்தவள். பாரீசுக்கு வரும்பொழுது அவளது வயது பதினேழு. கையில் காசு கிடையாது. இளமையும், எழிலும்தான் மிஞ்சியவை. வாழ்வு! அது ஏதோ அவளால் கனவு காணப்பட்ட பொருள் தன் பழைய நினைவுகளைக் கூறும் பொழுது சொற்கள் தழதழத்தன; நீர்த்துளி படர்ந்தகண்கள் சொற்றொடர்களை முடித்தன. அவளுடைய தாயகம்-அங்கே செல்லமுடியாது. குளிர், பிணி, பட்டினி-இவைகளால் வேட்டையாடப்பட்ட மிருகம், போலிசாரால் விரட்டப் படும் அனுதை.

வரலாற்றை ஜோலா உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். பலவாண்டுகளாக அமைதியை அறியாத அவள், தன் துயரை மற்ருெருவரிடம் கூறுவதில் சிறிது அமைதியடைந்தாள். இருவரும் நேரம் போவதையே கவனிக்க

வில்லை. அவர்கள் தான் அந்தக் கடையில் கடைசி. சொந்தக்காரன் கடைசியாக ஒவ்வொரு விளக்காக அணைக்க ஆரம்பித்தான். அப்பொழுதுதான் எழுந்துபோக வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகியது.

மூவரும் வெளிக் கிளம்பினர். ஜோலா அவளுடைய அறைக்குப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தான். நகரில் மிக மோசமான துர்நாற்றம் வீசுகிற குறுகிய தெருவை அடைந்தனர். புழுதியடைந்த வீட்டு வாயிற் படிகளில் பெண்கள் "ஏதாவது அதிர்ஷ்டம் வராதா?" என்ற நம்பிக்கையுடன் நின்று கொண்டிருந்தனர் ஜோலா போகும்பொழுது அவர்களது ஆச்சரியக் குரலும், ஏளனச் சிரிப்பும், பொருமைப் பேச்சும் அவனுடன் வரும் மங்கையின் மீது வீசப்படுவதைக் கேட்டான்.

தன்னுடைய வருகை தூய்மையானது என்பதைக் காட்டத் தன் நண்பனைத் தொடரும்படி கையசைத்து விட்டு, ஜோலா அப்பெண்ணின் அறைக்குள் நுழைந்தான். மங்கிய விளக்கொளியில் அலங்கோலமான அந்த அறையில் அவன் கடிதக் கட்டுகளையும், புகைப் படங்களையும் புரட்டினான். கடைசியாகப் புகைப்படமொன்று கிடைத்தது. 'நானு" ஆம் அவளுடைய பெயர் குழந்தையின் சட்டையொன்றை அவன் கையிலெடுத்தான். அம்மங்கை கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள் அவளுடைய குழந்தை. அது இறந்துவிட்டது.

ஜோலாவுக்கு உலக வரலாறே கண்முன் வந்து நிற்பது போலக் காணப்பட்டது. ஆவேசத்துடன் தன நண்பனை அழைத்து அவன் கையிலிருந்து அப்பெண்ணின் சித்திரத்தில் "நானு" என்ற பெயரைத் தீட்டினான் அந்தப்பெயரில் ஒரு பெருங்கதை பிறந்தது, உலகையே உலுக்க.

அந்தப் புத்தகம் பாரிஸ் நகரையே குலுக்கியது முதியோர்கள் திகைத்தனர். இளைஞர்கள் துடிதுடித் தனர். அது நாட்டில் நிலவிய கொடுமையை விளக்கிக் காட்டியது. நாட்டின் நலிந்த நிலை ஏட்டிலே இடம்பெற விடுவது உயர்ந்த தன்மையல்லவென்று கலைப்பூங் காவின் காவலர்கள் சினந்தனர். ஆனால் கரடு முரடான வாழ்வினர், 'இவை இதற்குமுன் ஏன் ஏட்டில் வரவில்லை எனக்கேட்டனர். புத்தகக் கடைகளிலெல்லாம் புத்தகங்கள் கண்ணுக்குத் தெரியும்படி வைக்கப்பட்டிருந் தன. சமூகத்தில் 'மதிப்பிற்குரிய' வகுப்பினர் திடீரென்று புத்தகக் கடையில் நுழைந்து பலப்பல புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பார்கள்' கடைசியில் ஏதோ பேச்சு வார்த்தையில் கேட்பது போல 'நானு' இருந்தால் ஒரு புத்தகம் தா எனச் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு மெதுவான குரலில் கேட்டு வாங்கிச் சென்றனர்.

"நானு"வைப்பற்றி பாரிஸ் முழுவதும் பேசிக்கொண் டிருந்ததேயன்றி உண்மையான "நானு"வுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் வழக்கம்போல் 'வாழ்வை' நடத்திவந்தாள். ஒருநாள் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நானு சென்று கதவைத் திறந்தாள். ஒருவரையும் காணோம். கதவுப் பிடியில் மூட்டை யொன்று தொங்கியது. அதை அவிழ்த்ததில் 'நானு' என்ற புத்தகம் பூங்கொத்து. தின்பண்டங்கள், பணம்... முதலியன இருந்தன.

*   *   *

அப்படிப்பட்ட ஜோலா, பிரான்சு நாட்டிலே இலக்கிய மன்றத்தாரால் ஏளனம் செய்யப்பட்டு, புத்தகம் வெளியிடுவோரால் புறக்கணிக்கப்பட்டு, மேட் டுக் குடியினரால் வெறுக்கப்பட்டு, தன் பாட்டு மொழி

யினால் நாட்டுக்குக் கேடுவருகிறதென்று பலர் பழித்துரைக்கக் கேட்டு பாரிசில். பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருந்தார். போராடிப் போராடியே, உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பினார். ஆகவேதான், எமிலிஜோலாவால் நாணுவுக்காக அனுதாபத்துடன் போராடியவரால் டிரைபசுக்காகப் போராட முடிந்தது. மற்றவர்கள். "மேதை" என்ற புகழ்பெற மேட்டுக் குடியினரின் பாத சேவை செய்தனர்; அரண்மனைக்கு ஆலாத்தி எடுத்தனர்; ஆலயப் பூசாரிக்கு அன்பாபிஷேகம் செய்தனர். ஜோலா, மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட நசுக்கப்பட்ட, கொடுமைப் படுத்தப்பட்ட மக்களுக்காக எழுதினார்! எழுதினார் என்றால் போராடினார் என்றே பொருள். அவருடைய எழுத்து. வீரன் கைவாளை விட வலிவுடையது. உள்ளத்தை உலுக்கக் கூடியது; உலகே எதிர்த்தாலும் அஞ்சாது போரிடும் எழுத்துக்கள். மமதைக் கோட்டைகளைத் தூளாக்கும் வெடிகுண்டுகள். "நீதி" வேண்டும் என்று ஜோலாவின் பேனா எழுதிற்று, என்ன நேரிட்டது? "நீதி" கிடைத்தது! மந்திரி சபைகளை அவருடைய பேனாமுனை மாற்றி அமைத்தது. பல மண்டலங்களிலே, மறக்கப்பட்டுப் போன டிரைபசுக்கு. நண்பர்களைத் திரட்டிற்று. ஒரு பெரும்படை திரட்டிவிட்டார், பேனா மூலம். எங்கோ தீவிலே, ஏக்கத்துடன். "நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று கதறிக்கொண்டிருந்த டிரைபசுக்கு, வெற்றி; விடுதலை! பதினொரு ஆண்டுகள் பராரியாகப் பாழும் தீவில் வதைப்பட்டவனுக்கு, வெற்றி. விடுதலை; ஒரு ஜோலாவின் எழுத்தால்!!

* * *

பிரெஞ்சு ஜெர்மன் சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்தசமயம், பிரெஞ்சு ஒற்றனொருவன் ஜெர்மன்

படைத்தலைவரிடம் அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பொழுது சிறிய குறிப்பொன்று அவன் கையில் சிக்கியது. அதை அவன் உடனே பிரெஞ்சுபடைத் தலைமை இடத்திற்கு அனுப்பினான், அந்தக் குறிப்பில் பிரெஞ்சு நாட்டுக்கு உயிர்போன்ற படையமைப்பு இரகசியங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்த இரகசியங்கள் படைத்தலைமைக் குழுவினருக்கு மட்டுமே தெரிந்திருக்க முடியும். யார் அந்தத் துரோகி? படைத்தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்ந்தனர். கடைசியாக ஆல்பிரட் டிரைபஸ் என்பவன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. உண்மையில் அந்தத் துரோகத்தைச் செய்தவன் எஸ்டர் ஹேஸி என்பவன். படைத் தலைமைக் குழுவின் செல்வாக்குப் பெற்றிருந்த எஸ்டர் ஹேஸியின் நண்பர்கள், அவசரமாக டிரைபஸ்மீது வழக்குத் தொடுத்தனர்.

1985-ம் ஆண்டு டிரைபஸ் இராணுவ மன்றத்தால் குற்றஞ் சுமத்தப்பட்டு, அந்தமான் போன்ற டெவில்ஸ் தீவுக்கு அனுப்பப்பட்டான். தண்டிக்கப்பட்ட உடனேயே அவன் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான். பெரிய மைதானத்தில் அவனுடைய படைவாளும் இராணுவச் சின்னங்களும் பிடுங்கப்பட்டன. கூடியிருந்த மக்களும் ஒழிக டிரைபஸ்' என முழங்கினர். கடல் முழக்கத்தில் பறவை கூவுவதுபோல், டிரைபஸ் "நான் குற்றமற்றவன்! பிரஞ்சு வாழ்க!" எனக் கதறினான். டிரைபஸ் அங்கு ஒரு பக்கத்திலிருந்த பத்திரிகைக்காரனைப் பார்த்து 'நீங்களாவது எனது தூய்மையை உலகுக்குக் காட்டுங்கள்' எனக் கூறினான். பத்திரிகைக்காரர்களுக்கு உண்மையை எழுதச் சொல்ல இவன் யார்? அவர்கள் திரும்பினார்கள். "துரோகி டிரைபசின் முடிவு" என்று கொட்டை எழுத்துக்களைத் தீட்ட.

அங்குவந்திருந்தவர்களில் ஒருவர் காதில் அந்தச் சொற்கள் விழுந்தன. "குற்றமற்றவனுயின், உலக வரலாற்றிலேயே மிகக் கொடுமையாகத் தண்டிக்கப் பட்டவன் அவன்தான்" என்று அவர் முணுமுணுத்தார். அவர்தான் பிரெஞ்சு நாட்டுப் பெரும் இலக்கிய ஆசிரியர் அனதேல் பிரான்சு.

மற்ருெருவர் அங்கே வரவில்லை. ஆனால் அவர்காதிலும் டிரைபஸின் கூக்குரல் விழுந்தது. எழுதுகோலை வைத்துவிட்டு, கைகளைப் பிசைந்துகொண்டே அங்குமிங்கும் அறையில் அவர் உலாவினார் வெறித்த பார்வையுடன். 'அநீதிக்கு இடமளிக்கமுடியாது' என்று கூறினர். அவர்தான் ஜோலா.

* * *

டிரைபசின் நண்பர்கள், ஜோலாவிடம், சில குறிப்புகளை கொடுத்தனர். அவனுடைய தூய்மைக்கான ஆதாரங்கள். அவைகளைத் துணைக்கொண்டு வேலைசெய்ய வேண்டும் டிரைபசை மீட்க வேண்டும்; நீதியை நிலை நாட்ட வேண்டும. "முடியுமா?" சே! என்ன கேள்வி அது கோழையின் மொழி.

ஜோலா, பேனவை எடுத்தார். பிரான்சு முழுவதும் டிரைபசை வெறுக்கிறது· ஆம்! அவனுக்காகப் பரிந்து பேசுபவரையும் பகைக்கும். இலக்கிய மன்றம் இடித்துரைக்கும், ஆமாம்! ஆனால் அநீதிக்குச் சக்தி அதிகம் இருக்கிறது என்பதற்காக அதன் போக்கில் விட்டு விடுவதா, அதன் அடிபணிவதா, அதற்கா, இந்த அறிவு ஆற்றல்? விளக்கைத் தூண்டினர்; குறிப்புத் தாட்களையும் ஆதாரக் கடிதங்களையும் ஒன்று சேர்த்தார்;களத்திலேபுகும்வீரனானர்;உண்மை எழுந்தது! எழுதினர், எழுதினர், இரவெல்லாம் எழு

தினர்! எங்கோ தீவில் எவனோஒருவன்படும் அவதியைத் துடைக்கத் திட்டினர். இரவு இரண்டு—ஓயவில்லை; மூன்று—முடியவில்லை; நான்குபேறு வேலை செய்தவண்ணமிருக்கிறது. ஜோலாவின் மனைவி,விடியற்காலை பார்க்கும்போது, அறையில் விளக்கு எரிகிறது; ஜோலா எழுதுகிருர், மேஜை எல்லாம் தாள்கள். ஆவேசம்கொண்டவர்போல் ஜோலா இருந்தார்; "நீதி" தயாராகிவிட்டது.

* * *

"அரோரி" பத்திரிகைக் கூடத்திலே, நண்பர்களை வரச்சொல்லிவிட்டு, ஜோலா கிளம்பினர் அவர்களைக் காண .

பரட்டைத் தலையுடன், கசங்கிய உடையில், வேகமாக கடைவீதியில் ஜோலா சென்றபொழுது கோச்சு வண்டியில் இருந்த நீதிபதிக்கு ஜோலாவின் வேகம் கலக்கத்தை உண்டாக்கியது, விலைகூறிகொண்டிருந்த கடைக்காரன் ஜோலாவையே பார்த்தான். சிற்றுண்டி அருந்திகொணடிருந்தவர்கள் ஜோலாவைக் கண்டதும வாசற்படியில் வந்து நின்றனர். பததிரிகைக்கூடத்தில நுழையுமபொழுது அவரால் அழைக்கப்பட்ட அனைவரும் காத்திருந்தனர். எரிமலை வெடிக்கபோகிறதா?

டிரைபசினுடைய மனைவியின் கண்கள் நம்பிக்கையால ஒளிவிட்டன. வழக்கறிஞர்லபோரிக்கு ஒவ்வொரு விநாடியும் யுகம்போலத் தோன்றியது. அனதேல்பிரான்சுக்கு உட்கார முடியவிலலை. எல்லோருக்குமவணக்கம் செலுத்திவிட்டு ஜோலா தன் கையெழுத்துக் கட்டைப்புரட்டினர்.

"பிரெஞ்சுக் குடியரசின் தலைவரே...டிரைபஸ்வழக்கு பிரெஞ்சு நீதியின்மீது அழியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது...!"

டிரைபசின் மனைவி மகிழ்ச்சியால் முகமலர்ந்தாள்.

ஜோலா கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தார். அறையில் அமைதி நிலவியது. டிரைபசின் சகோதரரின் கன்னத்தில் கண்ணீர் வழிந்தது

"அநீதிக்கு வழிவிட்டு நாம் அமைதியாக வாழ முடியாது. டிரைபஸ்மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன, அவன் நன்றாகப் படித்தவன்—குற்றம்- சலியாத உழைப்பாளி—குற்றம். உண்மையான சாட்சியங்கள் அவனுக்காதரவாய்க் கிடைக்கவில்லை, குற்றம். அவன் ஒரு யூதன்—குற்றம்—அவன் கலங்காதவன்—குற்றம். அவன் கலக்கமடைந்தான்—குற்றம்"

துடிதுடிக்கின்ற விரல்களால் மற்றொரு பக்கத்தைப் புரட்டினார், குரல் இன்னும் கனத்தது.

"யுத்த மந்திரி, இராணுவக் குழுவினர் படைத் தலைமை எஸ்டர் ஹேஸியைச் சந்தேகிக்க மனமொப்பவில்லை. ஓராண்டிற்கு முன்பிருந்தே அவர்களெல்லோருக்கும் நன்றாகத்தெரியும் டிரைபஸ் குற்றமற்றவன் என்று. குற்றமற்றவன் தீவில் வாழும்பொழுது, அநீதி வழங்கியவர்கள் அமைதியாக வாழுகிறார்கள், மனைவி மக்களிடம் அன்பு பாராட்டி மனிதாபிமானமுள்ளவர்களாக."

நீர்த்துளி படர்ந்த கண்ணாடியைத் துடைத்துகொண்டு ஜோலா மேலும் படிக்கலானார்.

"இராணுவக் குழுவினர் எஸ்டர்ஹேஸை விசாரித்தனர். ஏன்? டிரைபஸை மற்றுமொருமுறை தண்டிக்க இது உண்மை, ஆனால் பயங்கரமான உண்மை. நான் உறுதியுடன் கூறுகிறேன்—"உண்மை கிளம்பி விட்டது. எதுவும் இதைத் தடைசெய்ய முடியாது."

ஜோலா உரத்த குரலில் கூவினர். பத்திரிகைக்கூட வாயிலில் மக்கள் கூட்டம் தேங்கியிருந்தது. கண்ணாடிக் கதவுகளின் வழியாக ஆச்சரியமுற்ற கலங்கிய முகங்கள் துடிதுடிப்புடன் காத்துக் கொண்டிருந்தன.

"புகழ்பெற்ற பிரெஞ்சு தாயகத்தின் தனிப்பெருந் தலைவரே! மூன்று ஆண்டுகளாக வழக்கை நடத்திய டார்ட் என்பவர் மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன். கிடைத்த உண்மைக் குறிப்புகளை மறைத்ததற்காக யுத்தமந்திரியின் மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன்! அதே பழிச் செயலைச் செய்த இராணுவக் குழுவினரையும், உதவி படைத் தலைவரையும் நான் குற்றஞ் சாட்டுகிறேன் ! கைதியினிடத்தில் கொடுமை காட்டிய பாரிஸ் சிறைச்சாலைத் தலைவர்மீது நான் குற்றஞ் சாட்டுகிறேன். வழக்கில் பொய்ச் சாட்சிகளும் பொய்க் கையெழுத்தும் தயார் செய்தவர்கள் மீதும் குற்றம் சாட்டுகிறேன்!

பொதுமக்களின் மனதை மாற்றும் வகையில் பொய்ப் பிரசாரம் செய்த யுத்த இலாக்கா முழுவதையும் நான் குற்றம் சாட்டுகிறேன்! வழக்குக்கு ஆதாரமான சாட்சியங்களை தண்டிக்கப்படுபவனால் பரிசீலனையும் சமாதானமும் கூறமுடியாத வகையில அவசரத்துடன் அநீதி வழங்கிய முதல இராணுவ மன்றத்தை நான் குற்றம் சாட்டுகிறேன்! உண்மையான குற்றவாளியை "குற்றமற்றவனென" பெருந்தவறு செய்த இரண்டாவது இராணுவ விசாரணை மன்றத்தை நான் குற்றஞ் சாட்டுகிறேன்! ஒரு அனுதையின் மீது இல்லாத பழிகளைச் சுமத்தி ஆயுட்கால தண்டனையைக் கொடுத்த அனைவரையும்—அந்தக் குற்றஞ் சாட்டிய அனைவர் மீதும் நான குற்றஞ் சாட்டுகிறேன்! இத்தகைய குற்றச் சாட்டுக்களை தெரிவிப்பதன் மூலம் நான் சட்டத்தை அவமதிப்பவனாக அவதிக்குள்ளாக்கப்படுவேன்

என்பது தெரியும், அதைப் பற்றிக் கவலையில்லை. நான் நீதி வேண்டுகிறேன். குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்து விட்டது; விளக்கமான மறு விசாரணை நடப்பதாக!''

பத்திரிகைக் கூடம் பரபரப்புடன் வேலை செய்யத் தொடங்கியது. முதல் பிரதி—இரண்டு மூன்று—வேகமாக ஆயிரக்கணக்கில் பத்திரிகை குவிந்தது. ஜோலாவின் ''குற்றச்சாட்டு'' பாரிசைக் கவ்வியது. எதிர்பாராதது. ஒருவருக்கும் என்ன சொல்வதென்றே புரியவில்லை. யுத்த மந்திரிசபை கூடியது. ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்வது? படைக் குழுவினர் கூலியாட்களை அமர்த்தி, 'ஜோலா வீழ்க?' எனக் கூவச் செய்தனர், வீதிகளில் மூர்க்கத்தனமான சம்பவங்கள் நடைபெற்றன. ''அரோரி'' பத்திரிகைக்கூடம் தாக்கப்பட்டது, ''குற்றச்சாட்டு'' செய்தித்தாள்கள் கிழிக்கப்பட்டன. ஜோலாவின் கண்முன்னல் அவருடைய வைக்கோலுருவமும் டிரைபசின் வைக்கோலுருவமும் தீயிலிடப்பட்டன. ஜோலா துரத்தப் பட்டார். அவருடை வண்டிக்குள் கற்கள் விழுந்தன! இரத்தக் காயத்துடன் ஜோலா வீட்டிற்குச் சென்ருர்' வீட்டில் தயாராகக் காத்துக் கொண்டிருந்த போலீஸ் ஜோலாவைக் கைதாக்கியது.

ஜோலாவின் வழக்கு ஆரம்பமாகியது. ஜோலாவிற்காகத் திறம்பட வாதித்தவர் லபோரி' வழக்கு ஆரம்பமாகும் பொழுது, அது தனிப்பட்ட வழக்கென்றும் டிரைபஸ் வழக்கிற்குச் சம்பந்தப்பட்டதல்லவென்றும் நீதிபதி கண்டிப்பாகக் கூறினர். அது ஒரு இராணுவத்தினரின் நாடகம் போல முடிந்தது கடைசியில் ஜோலா கூறியவை மறுக்க முடியாதன; ''நான் எழுதுபவன், பேசும் திறன் படைத்தவனல்ல, எனது வாழ்நாளில் பெரும் பகுதி

உண்மையொளி காண செலவழிக்கப்பட்டது. அதே விருப்பத்தால்தான் இந்த வழக்கில் ஈடுபட்டேன். பலமான இராணுவத்தையும் அதிகாரமுள்ள அரசாங்கத்தையும் எதிர்க்க முடியுமா? என என் நண்பர்கள் என்னைத் தடுத்தனர். தனி மனிதர்களின் சிதைவில் நீதி சிறக்குமாயின் அதனால் பலன் பெரிதே...வரலாற்றில் மறக்கமுடியாத பெரும் குற்றத்தை இந்த நீதி மன்றம் செய்துவிட்டது. நீதிக்கு வழிகாட்டிய எனது புகழ்மிக்க தாயகம் அநீதிக்கு எடுத்துக்காட்டாக ஆக்கப்படுவதை நான் ஒப்பவில்லை...

பிரெஞ்சு நாட்டின் முன்னால்,உலகின் முன்னால்,அழுத்தமாகக் கூறுகிறேன்:டிரைபஸ் குற்றமற்றவன் என்னுடைய நாற்பதாண்டு உழைப்பின் மீது, நாட்டிலே பரவிய புதிய உண்மையுணர்வின்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். டிரைபஸ் குற்றமற்றவன்! நான் அழிந்து போவேன்...என் புகழ் மங்கிப்போகலாம்...எனினும் டிரைபஸ் குற்றமற்றவன்!''

ஜோலா போராடினார். விசாரிக்கு முன்பே முடிவு கட்டப்பட்ட வழக்கில் நீதிக்கு இடமெப்படி இருக்க முடியும்? ஓராண்டு சிறைத்தண்டனையும், மூவாயிரம்பிராங்கு அபராதமும ஜோலாவுக்கு விதிக்கப்பட்டது.

இராணுவத்தினர் குதூகளித்தனர். வெளியில் கூடியிருந்த கூட்டம் ''இராணுவம் வாழ்க! வீழ்க ஜோலா'' என முழங்கியது.

''என் புகழ் மங்கிப் போகலாம். ஆனால் டிரைபஸ் குற்றமற்றவன்! !'' ஜோலாவின் முழக்கம் அது. புகழ் மங்கவில்லை. பெரியதோர் ஒளியைப் பரப்பிக்கொண்டு கிளம்பிற்று, டிரைபசும் விடுதலைபெற்றான். அதுபிறகு, ஆனால் முதலில் வெற்றி இராணுவத்தினருக்கு. ''வீழ்க ஜோலா முதலில். பிறகு ''வாழ்க ஜோலா'' முதலில், ஜோலா

பாரிஸ் பட்டணத்திலே நிலைத்திருக்கவே முடியாத நிலை இருந்தது.

ஜோலாவும் அவனுடைய நண்பன் பால் செஸானே என்பவனும அந்த ஊருக்கு மிகுந்த நம்பிக்கையுடன் தான் வந்தார்கள். பொழுதுபோவதுகூடத் தெரியாமல் இருவரும் சிறிய வாடகை அறையில் உட்கார்ந்து திட்டமிடுவார்கள். செஸானே தன் ஓவியத் திறமையால் உலகையே ஆட்டமுடியும என்பான்; ஜோலா தன் எழுத்தாண்மையால் வாழ்க்கையை வளம் பெறச் செய்டலாம் எனக் கனவு காண்பான். கையிலிருந்த காசு குறையக் குறைய, அவர்களுடைய உற்சாகமும் குன்றியது. மிகச் சுலபத்தில் கட்டப்பட்ட கற்பனைக் கோட்டைகள் வெகு விரைவில் தரைமட்டமாயின. மிகுந்தவை இருட்டறையில் உலாவுகிற செஸானேயும வறுமைச் சக்தியில் தத்தளித்துக் கொண்டிருந்த ஜோலாவும் தான்.

ஜோலாவுக்குப் பாரிஸ் நகரததுப் பெயர்பெற்ற புஸ்தகக் கடையொன்றில் வேலை கிடைத்தது. புஸ்தகங்களை அடுக்கி மூட்டைகட்டும் வேலைதான் செய்தான். அதற்காகக் கிடைத்த சிறுவருவாய் அவர்களது 'எப்பொழுதும் வறுமை' என்ற நிலையை ஒழித்தது. ஜோலாவுக்கு இப்பொழுதுதான் தன்னைச் சுற்றிலும் பார்த்து நுணுக்கங்களை உணர நேரம் கிடைத்தது. உள்ளே வறுமையாலும் துன்பத்தாலும் துடித்துக்கொண்டிருந்த உலகின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு ஆராய ஆரமபித்தான். அவன் ஆராய விரும்பிய உண்மைகள் மேல் பூச்சின்றி, மறைக்கப்படாததால் சந்து பொந்துகளில் பொதிந்து கிடந்தன. ஒவ்வொரு உண்மையும் வைரத்தைப்போன்று அவனுக்குப் பிரகாசித்தது. சோர்வும் வெறுப்பும் கொள்ளாமல் ஜோலா தான் பார்த்தவைகளைக்

குறிப்பெடுத்தான். பெரும்போருக்கு ஆட்கள் திரட்டுவதைப்போல ஜோலா சமூக அநீதிகளைத் திரட்டிக் கொண்டிருந்தான். இரவில் வெகுநேரம்வரை பாரிஸ் நகரத்துச் சேரிகளில் அவன் உலவுவான். வீதியோரத்திலும், சாக்கடைப்பக்கங்களிலும், இடிந்த மனைகளிலும் ஆற்று படிக்கட்டுகளிலும் பெருவாரியான மக்கள் குளிர் பொறுக்க மாட்டாது அடைந்து கிடப்பதைக் கண்ணுற்றான். இருட்டின் கறைகள், இருண்ட வாழ்வினர் தொங்கும் நரம்பின் குப்பைகள், சமூக பலி பீடத்தில் சாய்ந்த மாந்தர் அனைவரையும் கண்ணுற்றான்.

ஜோலா சிறுசிறு கட்டுரைகள் எழுதி, பத்திரிகைக்காரர்களிடமிருந்து உதவி பெறுவான். புத்தகக் கடைச் சொந்தகாரருக்கு ஜோலாவின் போக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய "கீழ்த்தரமான" கட்டுரைகளால் கடையின் மதிப்புக் கெட்டு விடுமென அவர் பயந்தார். அதற்கேற்றாற்போல் கலைச்சீமான்களையும், அரசியல் கனதனவான்களையும கடுமையாகக் கண்டித்து ஜோலா எழுதிய புத்தகம் போலீசாரின் கவனத்துக்கு வந்தது. ஜோலாவும் வேலையைவிட்டு நீக்கப்பட்டான்.

1882-ம் ஆண்டு முதல், அதாவது அவனுடைய 22-ம் வயதிலிருந்து ஜோலா தன் பேனாவை நம்பியே வாழ வேண்டிவந்தது. ஜோலா மனங் குலையவில்லை; உறுதியுடன் தன் போராட்டததைத் துவக்கினான். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அட்டவணை போட்டுக் கொண்டு சலியாது அவன் உழைத்தான். நூல்களைப் பதிப்பிக்க அவனுடைய நண்பரொருவர் முன் வந்தார். ஜோலாவின் கதைகள் கட்டுரைகள் ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்தன. அவைகள் சமூகத்தின் அநீதியையும் அரசியல் அக்ரமத்தையும் வன்மையாகக் கண்டித்தன. முதலில் அவனுடைய புததகங்கள்

விலை போக வில்லை. ஏனெனில் தங்களைப்பற்றிய முழு உண்மையை உணர மக்கள் மனங்கூசினர். புத்தகக்கடைக் காரர்களுக்குப் பிடிக்கவில்லை.

சாதாரண ஜோலா இலக்கிய உலகில் புகுந்து விட்டார். புத்தகங்கள் ஒன்றன் பின் ஒன்ருகக்கிளம்பின. மலையுச்சியிலிருந்து விரைந்து வரும் பேராறுகளைப் போல கட்டுரைகள் ஜோலாவின் பேனுமுனையிலிருந்து கிளம்பின. அவருடைய நாவல்களனைத்தும் அடிப்படையான கருத்துக்களின் மீது கட்டப்பட்டவை, கற்பனையில் கனி தருகிற கற்பகத் தருவைவிட, குப்பைமேட்டில் சேர்ந்திருக்கிற முட்செடி ஜோலாவுக்கு மேலானதாயிருந்தது. தான் கண்ட உண்மைகளை எழுச்சி தரும் வகையில அவர் உலகுக்கு எடுத்துக் காட்டினுர், சமூக அமைப்பில் கண்ட ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டினுர். கொடுங்கோலர்களை எதிர்த்தார்; குருமக்களைச் சாடினுர். அவருடைய நாவல்களில் நிலையற்ரோர், வஞ்சகர், அனுதைகள், ஆணைக்காரர், திருடர், சோம்பேறிகள், குடிகாரர், கனவு காண்போர், நலிந்த உழைப்பாளர், கொடிய முதலாளிகள், பேராசைப் பாதிரிமார், முதுகெலும்பற்ற கலைவாணர், வெறிகொண்ட மதப்பித்தர். அனைவரும் சித்தரிக்கப்பட்டனர்.

சாதாரண குடும்பத்தினரின் வரலாற்றை விளக்கமாகத் தொடர்ந்து எழுதுவதென ஜோலா 1871-ல் தொடங்கிச் சுமார் 50 ஆண்டுகளில் 20 நாவல்கள் வெளியிட்டார். ஒவ்வொரு நாவலும் வாழ்க்கைப் பகுதியை தனித தனியாக விளக்குவது. மார்க்கட்டைப் பற்றிய நாவலில் பணத்திற்காகச்செய்யப்படும மோசடிகள் கூறப்பட்டுள்ளன. அடுத்த நாவல் குடியைப் பற்றியது. அது 1877-ல் வெளி வந்தது எழுதிய நாவல்களில் முதலில் மக்களை அவர் பக்கம் இழுத்தது அந்த நாவல் தான.

1880-ல் "நாநு" வெளிவந்தது. "லா பெட் டே ஹு மன்னே" என்பது புகைவண்டிகளைப் பற்றியது. "ஜெர் மினல்' சுரங்கங்களின் இருண்ட வாழ்வைப் படம்பிடிப்பது. பெரும் முதலாளிகளின் சுரண்டல் போக்கை வெட்ட வெளிச்சமாக்கியது. "வா ர் ஜெ ந் த்" உலக வரலாற்றில் எழுந்த முதல் தொழிலாளர் அரசாங்கம் உள் நாட்டு முத லாளிகளாலும் பிரஷிய பிரபுக்களாலும் நெரிக்கப்பட்டுத தொழிலாளரின இரத்தமும். ஏழையின் கண்ணீரும் சிந்தப் பட்ட 1870-ம் ஆண்டைப் பற்றிய "வீழ்ச்சி" ஜோலாவின் நாவல்களில் உயர்ந்த வகையில் ஒன்றாகும். "லூர்வார்ட்ஸ் என்ற நாவல் மதத்தின் மூட நம்பிக்கைகளைச் சிதறடித்தது.

போராமப் பெற்ற நிலையை, ஒரு துர்ப்பாக்யனுக்கு நீதி தேடித்தரத் துணிந்ததால் இழந்த ஜோலா சிறை புக வேண்டுமென்று "தீர்ப்பு' கிடைத்தது.

ஜோலாவின் இடையறாத உழைப்பிற்கு அவரடைந்த பலன்!

நாட்டை விட்டு ஓடிப்போகும்படி நண்பர்கள் கூறினர் அது "கோழைத்தனம்" என ஜோலா உதறித் தள்ளினார் பக்கத்திலிருந்த நண்பர் அவரைத் தட்டி 'ஜோலா பாரிஸ் சிறையில் வாடுவதில் பலனில்லை. வெளி நாட்டுக்குச் செல் அங்கிருந்து டிரைபஸ் வழக்குப் பற்றி கட்டுரைகள் அனுப்பு ஓடிப்போவதால் நீ கோழையாக மாட்டாய். தாய் நாட்டை விட்டு, மனைவி நண்பர்களை விட்டு ஓடுகிறாய், உன் கருத்தை —லட்சியத்தைப் புறக்கணித்தல்ல. "சில சமயங்களில் கோழைப் பட்டத்தை ஏற்றுக்கொள்ளப் பெரிய வீரம் வேண்டும் என்றார். ஜோலா அதை ஏற்றுக் கொண்டார். 1897-ம் ஆண்டு அவரது 57-ம் வயதில் ஜோலா இங்கிலாந் துக்கு ஓடினார்.

ஜோலாவின் வெடிகுண்டு தூரத்திலிருந்து வீசப்பட்டது. 'அரோரி' பததிரிகை இடைவிடாது உழைத்தது உண்மை கிளம்பி விட்டது. அதைத் தடுக்க எவராலும் முடியாது.

ஐரோப்பிய நாடு அரசியலிலே இரண்டாகப் பிரிந்தது. ஒரு பக்கத்தில் வெறிபிடித்த இராணுவம், பிரபு அரசவம்சம், மதத்திற்கும் கலைக்கும் பாதுகாப்பளிக்கிற குருமார் கூட்டம் மறு பக்கத்தில் மெதுவாகத் தலை தூக்குகிற புத்துணர்ச்சி.

பிரெஞ்சு மந்திரி சபை மாறியது. உண்மைத் துரோகி எஸ்டர் ஹேஸி நாடடை விட்டோடினன். முன் வழக்கை ஜோடித்த வழக்கறிஞர் டார்ட் வேலையிலிருந்து நீக்கப்பட்டான. டிரைபஸ் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வநதது.

1899-ல் பிரான்சு நாட்டுக்கு ஜோலா, திரும்பினன் மூன்ருண்டுகளுக்கப்புறம் துடிதுடிப்பான இருதயம் ஓய்ந்தது. 1902 செப்டம்பரில் ஜோலா இறந்தார். அவருடைய முயற்சிகள் வீண் போகவில்லை. நீண்டகால வழக்கின் பின் டிரைபஸ் 1906-ல் தூய்மையானவன் என முழு விடுதலையளிக்கப்பட்டு உயர்ந்த இராணுவப் பதவிகள் கொடுக்கடபட்டான.

அவருடைய கல்லறைக்கருகில் அனேதேல் பிரான்சு உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினர். "நீதி உண்மை இவைகளைத் தவிர்த்து வேறெதுவும் அமைதியை வழங்காது. ஜோலா உலக உணர்வின் ஆரம்பத்தைக் குறிப்பவர்."

இலக்கியத்தில் ஜோலா அவருடைய ஏடுகளின் அளவினல் மதிப்பெய்த வில்லை. எளிய நடையில் ஒளி விட்ட

கருத்துக்களுக்காக, ஏழை எளியோரைப்பற்றித் தீட்டிய எழுத்தோவியங்களுக்காக, மூடத்தனம், வெளிவேடம் அநீதி, சுரண்டல் முறை, போர் இவைகளை எதிர்த்து எழுதியதற்காக மட்டுமல்ல; சமயம் நேர்ந்தபொழுது தனது தள்ளாத வயதில் பலமிக்க இராணுவம், அதிகாரமுள்ள அரசாங்கம் அனைத்தையும் எதிர்த்துத் தனியாக நாட்டையும் வீட்டையும் விட்டோடிப் போராடிய திறத்திற்காக ஜோலா உலக வரலாற்றிலே இடம் பெற்று விட்டார். "பிரான்சு நாட்டிற்குப் பலவகைகளில் தன் உழைப்பைச் செலுத்தலாம் ஒருவன் வாளேந்தியோ, பேனாவைப் பிடித்தோ தன் கடமையை நிறைவேற்றலாம்; என் பங்கில் எமலி ஜோலா என்ற பெயரை வருங்காலத்திற்கு வழங்குகிறேன். அது இரண்டிலொன்றை ஆராய்ந்து அடைவதாக" என்று ஜோலா கூறினார். வருங்காலம்—பின் சந்ததி ஜோலாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

ஜோலா ஓய்வேயறியாத உழைப்பாளி. அவருடைய வாழ்வு ஏமாற்றங்கள் நிறைந்ததாயிருந்தது. குறிப்பாக பிரெஞ்சு இலக்கிய மன்றம் அவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க மறுத்தது. ஆனால் பிரெஞ்சு மொழி இலக்கிய ஆசிரியனாகவல்ல, உலக இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை ஜோலா அடைந்து விட்டார்,

"எதை எழுதுவது?" என்றோர் நாள் நம கவிஞருக்குச் சந்தேகம் பிறந்தது. தாமரை தன் அழகைக்காட்டி எழுதச் சொல்லிற்றும், காடும் கழனியும், கார்முகிலும், கலாப மயிலும், மருவலனைய மாதரும், செவ்வானமும், அன்னமும், வீரமும், பிறவும், என்னைப்பற்றி எழுது! என எழிலைப் பற்றித் தீட்டு என்று கூவின, கவிஞர் கூறுகிறார் கேளுங்கள். ஜோலாவின் உணர்ச்சி அதிலே உள்ளதைக் காணுங்கள்.

"அன்னயிலே, தமிழ் நாட்டினிலே யுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி: இரக்க முண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!"

முற்றும்

அன்பு நிலையம்
131. பிராட்வே சென்னை-1